Regd No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 26-6-1948 சனிக்கிழமை மலர் 42.

## நாட்டின் நிலை.

(கிளிக்கண்ணிகள்)

1. ஒய்வு ஒழிதல் இன்றி
உழைப்பவர் கூலி வேண்டின்
நாய்போல் விழுவாரடி—கிளியே
நாட்டில் மலிந்தாரடி.

2. பன்றியைக் கடவுளென்பார்
பறவையும் அதுவே யென்பார்
நன்றியுடன் உழைப்பவர்க்குக்—கிளியே
நன்மதிப்புத் தாராரடி.

3. மனிதனைச் சாமி என்பார்
மகிழ்வுடன் காலில் வீழ்வார்
நினைப்பேதும் இல்லாரடி—கிளியே
நேர்மை மறந்தாரடி.

4. வேசையர்தம் வீடு சென்று
விரும்பிப் பொருள் தருவார்
ஆசையாய் உழைப்பவர்க்குக்—கிளியே
ஆறணா அளியாரடி.

5. கோவிலுக்குச் சென்றிடுவார்
கோதானம் கொடுத்திடுவார்
ஆயிரம் ரூபாய்ச் செலவில்—கிளியே
அபிடேகம் செய்வாரடி.

6. பாயின்றிப் பசியுடனே
படுத்துறங்கும் பஞ்சைகளைப்
போயென்ன என்று கேளார்—கிளியே
புல்லர்கள் தாம் ஆனாரடி.

"இராம அமராவதி."

## 1948 JULY. 1948

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**பெண்கள் பகுதி:**

# பேதைமை ஒழியப் பிரச்சாரம் வேண்டும்!

"தோழியர் சரஸ்வதி"

திராவிடத் தோழியரே!

கடும் வெய்யிலிலும், ஊற்றும் மழையிலும், அடிக்கும் புயலிலும், உடல் சோர்ந்துழைக்கும் தோழியரே ஒரு சொல் கேளீர்! உடல் உருக உழைத்துழைத்து ஒட்டிய வயிறுடனும், குழிவிழுந்த கண்களுடனும், ஒடுங்கிய கன்னங்களுடனும், பரட்டைத் தலையுடனும், பசியால் அழும் குழந்தைக்குப் பாலில்லாது, சுகத்தை நாடும் கணவருக்கு இன்பமூட்டச் சக்தியில்லாது, இந்நிலையிலே பகுத்தறிவைப் பாழாக்கிப் பயணச்சீட்டுத்தரும் பாமனுக்கு அமுது படைத்து, காசைக்கதம்ப மர்லைக்குக் கரியாக்கி குடிக்கக் கஞ்சியற்று, உடுக்க உடையற்று பஞ்சைகளாய், பராரிகளாய், சூத்திரர்களாய், பிரமன் பாதத்திலுதித்த பாமரர்களாய் கவலைக் கடலில் மூழ்கி, வறுமைக் குழியில் வாழ்வை இழந்து, பகுத்தறிவைப் பாலைவனமாக்கி, நச்சுப் பல்லை நாசுக்கான முல்லையென எண்ணி, பூணூலை பிரம்மாஸ்திர மென்றெண்ணி, உச்சிக் குடுமிகளை உயர் உன்னதக் கோபுரம், அய்யன், பெருமான் அமர்ந்திருக்கிற மென்மை முடியென்று அகத்தில் கொண்டு, உண்மை உணராது, உலுத்தர்களை உன்மத்தர்களாக்கி, பிரம்மனைப் பார்ப்பானாக்கி, பார்ப்பானைப் பிரம்மனாக மாற்றி, உழைக்காது உண்டு களிக்கும் உதவாக்கரை திண்ணை தூங்கித் தடி மகாராஜாக்களைத் தேவர்களாக்கி, பிச்சை யெடுக்க வந்த பேயர்களைப் பிரபுக்களாக்கி, ஆடுகள் மேய்க்க வந்த அனாதைப் பிணங்களுக்கு அரசியலில் பங்கு கொடுத்து, அய்யம் என்று வந்த அயோக்கியர்களுக்கு ஆசனம் அருளி அமரர்களாக்கி, நாம் மட்டும் கிழ்தரப்பட்டவர்கள், சூத்திரர் என்றும், பார்ப்பான் ஓர் திராவிடப் பெண்ணை மணக்கலாம்; ஆனால் ஓர் திராவிடன் பார்ப்பனப் பெண்ணை மணக்கக் கூடாது என்ற வஞ்சனையை, சதியைச் சட்டமென்றும் ஏற்றுக் கொள்ளலாமா? மானமே பெரிதென்று மதித்து வந்த நம் இனப் பெண்களுக்கு இது நீதி என்று தெரியலாமா? அடுப்பங்கரையே அமரருலகம், அம்மிக்கல்லே ஆகாய விமானம், மாட்டுச் சாணமே (கணவன் இல்லாது) கண் கண்ட தெய்வம் என்று மூடப்பழக்க வழக்கக் குட்டையிலே ஊறிக்கிடக்கும் தோழியரே! சிந்தனைக்கு, அகம் விசாலத்திற்கு, புத்திக் கூர்மைக்கு வேலை கொடுங்கள். சிந்திக்கத் தொடங்கினால் சிறு உலகம், அறிவுலகம் கண்டு விடலாம் கொலம்பசைப் போல.

உருசியாவிலே யுத்தமென்றால் மேனாட்டுப் பெண்கள் வீரமுடன் போர் தொடுத்து விமான மேறி வான வீதியிலே வன்மையுற்றுலவி அஞ்சாத நெஞ்சத்துடனும், ஒளி மிக்க கண்களுடனும், தளராத உள்ளத்துடனும், மங்காத மனோ வேகத்துடனும், மாரியெனக்குண்டுகள் பொழியச் செய்து வெற்றி கண்டு களித்து தன் நாட்டைப் பொன் போல போற்றிக் கண் போலக் காப்பாற்றி எதிரிகளுக்கு இடங்கொடாமல் கண் காணிப்புடனும் கவனித்து வருகிறார்கள். ஆனால் நம் பெண்களோ வெனில் கணவருக்குற்ற நோயைத் தவிர்க்க ஊரிலுள்ள மண்ணாங்கட்டி மாரியாத்தாளுக்கும், பிள்ளைக் கறி கேட்கும் பேச்சியாத்தாளுக்கும், பலி பல கேட்கும் பராசக்திக்கும், கள்ளுக் குடிக்கும் கருப்புராயனுக்கும், சுருட்டுக் குடிக்கும் முனீஸ்வரனுக்கும் வேண்டிக் கொண்டு காணிக்கைகள் கட்டிவிட்டு, அரசமரத்தை ஆயிரந்தடவை சுற்றுகின்றார்களே! இது அறிவுடைமையாகுமா! மற்றும், குழந்தைகளுக்கு முக வீக்கமா—அது மண்ணாங்கட்டி அல்லது தண்டு (தந்தி) மாரியம்மா; குழந்தை வயிற்று வலியால் இடை விடாது அழுகிறதா—அது பிசாசின் பயமுறுத்தல்; காலிலே ஏதாவது புண்ணா—தாண்டு குணம்; குடும்பத்திலே பிரிவா—விரல் நீக்கி சாப்பிட்டதனாலாய பயன்; பொறுக்க முடியாத நோவா—சாமிக்குக் காணிக்கை செலுத்தாததின் விளைவு; பூனை குறுக்காகப் போகிறதா—அபசகுனத்தின் அறிகுறி; கழுதையின் கதறலா—வெற்றியின் ஒலி; பல்லியின் சத்தமா—தரையில் கையால் கொட்டிக் கொள்ள வேண்டுமென்ற கடமை; இடது கண் துடிக்கிறதா—ஆபத்தின் சின்னம். இம்மாதிரி பல மூடக்கொள்கைகள் அநேகமநேகம் கண்டு வைத்துள்ளார்களே தவிர, இராமனுடைய பெண்சாதி சீதையைத் தெரிந்துள்ள உங்களை செங்குட்டுவன் மனைவியாரென்று கேட்டால் தெரியாது; அய்ந்துபேரை அடைந்து ஊருக்கெல்லாம் உத்தம பத்தினியான திரௌபதியைத் தெரிந்துள்ள உங்களை சத்தியத்தை, நீதியை, வீரத்தை நிலைநாட்டிய வீரபத்தினியாரென்றுகேட்டால் தெரியாது; இராமாயணத்தைத் தெரிந்த அளவுக்கு உலக மறையாம் திருக்குறளையருளிய திருவள்ளுவரைத் தெரியாது. ஏன் தெரியாது? அறிவைக் கோயில்களில் அடகு வைத்துவிட்டதே ஓர் பெருங் காரணம்.

பார்ப்பனப் பெண்களைக் கவனியுங்கள்! சங்கீதத்திலே முதலிடம். கலைகளிலே முதலிடம். சினிமாவிலே முதலிடம். அந்தி சந்தி வேளைகளில் பட்டம் பதவிகள் அவர்களுக்கு. கான சரஸ்வதிகள், இசைவாணிகள் எல்லாம் அவர்கள் மத்தியில். கலைகள் அவர்களிடம். செத்தவீட்டு ஒப்பாரிப்பாட்டுக்கள் நம்மிடம். அவர்கள் மேடை ஏறுகிறார்கள். நாம் அடுப்பு மடையில் ஏறுகிறோம். அவர்கள் வாய் கொடுத்துப் பேசாமல் வஞ்சகமாக வாழ்க்கையைக் கடத்துகிறார்கள். நாம் கள்ளங் கபடற்று வாய்விட்டுப்பேசிவம்பில் விழுந்து கொள்கிறோம்.

கையில் சிலம்புடன் கதறி அழுது ஆவேசம் கொண்டு நீதியை நிலை நாட்டிய கண்ணகி வழியில் வந்த நாம், என் மகன் போரிலே புறங்காட்டியிருந்தால் அவனைப் பெற்ற என் வயிற்றைக்கிழிப்பேன்

(தொடர்ச்சி 16-ம் பக்கம்)

# இதற்கு இரண்டாயிரமா?

## நல்ல தீர்ப்புக் கூறுங்கள்.

★

இப்போதைய "மக்கள் சர்க்கார்" அளித்த தீர்ப்பு, "விடுதலை" நன்னடத்தைக்காக இரண்டாயிரம் ஜாமீனாகக் கட்ட வேண்டுமென்பது. திராவிடர்களின் ஏகோபித்த, ஒரே குரலான விடுதலை நன்னடத்தைக்கு ஜாமீன் கட்டியாக வேண்டும் என்று கூறும் இந்தத் தீர்ப்பு நல்ல தீர்ப்பா? என்று நாம் காங்கரஸ் தோழர்களையும், மற்ற திராவிடத் தோழர்களையும் கேட்கிறோம்.

இன்றைய சர்க்கார், மக்கள் பிரதிநிதிகளின் சர்க்கார் என்றால் இந்த நடவடிக்கைக்கும் மக்கள் பொறுப்பாக வேண்டுமல்லவா? அந்தப் பொறுப்புக்குரிய பொது மக்கள் அளிக்கும் தீர்ப்புத்தானே உண்மையான தீர்ப்பாக இருக்க முடியும். ஆதலால் பொது மக்களைக் கேட்கிறோம் நல்ல தீர்ப்புக் கூறுங்கள் என்று.

எதை வைத்துக் கொண்டு தீர்ப்பளிப்பது என்கிறீர்களா? இதோ படியுங்கள். பிறகு கூறுங்கள் இந்தத் தீர்ப்புச் சரிதானா என்று? இது 2—1—48ம் நாள் "விடுதலையில்" வெளிவந்த தலையங்கம். இதை வெளியிட்டது குற்றமாம்! குற்றமா? நீங்களே கூறுங்கள்.

[ஆ—ர்]

இந் நாட்டுப் பொது மக்களின் அறிவுக் கண்ணைத் திறக்கும்படியான கல்வித்திட்டத்தைஇதுவரையில்எந்தஆட்சியும்வகுக்காமலிருப்பது வருந்தத்தக்கது. பிரிட்டிஷார்ஆதிக்கஞ்செலுத்திய இந்த இரண்டு நூற்றாண்டுகள் வரையில் அவர்கள் தங்கள் அரசாங்க நிர்வாகம் நடக்க வேண்டிய அவசியத்தை மட்டுமே கருதி கல்வித் திட்டத்தை அமைத்திருந்தனர். அவர்களுடைய பணிமனைகளுக்கு வேண்டிய குமாஸ்தாக்கள் உற்பத்தி செய்யவும், ஏதோ ஒரு சிறு அளவுக்கு பொதுஜன நன்மைக்கான கல்விகளைப் போதிக்கவுமே அவர்கள் கல்விமுறை பயன்பட்டு வந்தது. உதாரணமாக 40-கோடி மக்கள் உள்ள இந்தப் பெரிய உபகண்டத்திற்கு 47,500 டாக்டர்களும் 7,000 நர்சுகளும்தான் இருக்கின்றனர் என்றால், இந்நாட்டு மக்களின் தினசரி வாழ்க்கையில் அவர்களுக்கு எவ்வளவு உண்மையான அக்கரை இருந்திருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம். வெள்ளையர் ஆட்சியின் பயனாக கல்வித்துறையில் முழுப் பயன்பெற்ற ஒரு கூட்டம் உண்டென்றால் அதுதான் ஆரியக் கூட்டம்.

முஸ்லிம் ஆட்சியாக இருந்தால் உருது கற்றுக் கொண்டு நிர்வாகத்திற்குள் ஆதிக்கஞ் செலுத்துவதும், மராட்டியர் ஆட்சியாயிருந்தால் மராட்டிய மொழி கற்றுக் கொள்வதும், இங்கிலீஷ் ஆட்சியாயிருந்தால் இங்கிலீஷ் கற்றுக் கொள்வதும் இந்தக் கூட்டத்தாரின் வழக்கம். சந்தர்ப்பத்திற்கேற்றபடி வளைந்து கொடுக்கும் இந்தமனப்பான்மைக்கு வேறு உதாரணம் தேவையில்லை. கடந்த உலகப் போரின் போது ஹிட்லர் அய்ரோப்பிய நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டு இந்தியா மீது கண்ணோட்டஞ் செலுத்திய சமயத்தில் மயிலாப்பூர், தியாகராயநகர் முதலிய ஆரிய ஆதிக்க வட்டாரங்கள் ஜர்மன் மொழி பயின்று வந்தன என்பது ஒன்றே போதும்.

தமக்கென்று தாய்மொழி என்ற ஒன்று இல்லாதிருக்கும் ஒரு கூட்டம் வேறு எப்படித்தான் இருக்க முடியும்?

பிரிட்டிஷார் ஆட்சியினால் முழுப் பயன் அநுபவித்த கூட்டம் ஆரியக் கூட்டம் என்பது போல், காட்டுமிராண்டிகளாக்கப்பட்ட கூட்டம் திராவிடர்களேயாவர் என்பதை மறக்க முடியாது. 100-க்கு 90-பேர்களுக்கு மேல் தற்குறிகளாக உள்ள ஒரு இனம் திராவிடர்களைத் தவிர வேறு யார்தான் இருக்கிறார்கள்? பரம்பரையாகவே எழ்மையில் மூழ்கிக்கிடக்கும் இந்த இனத்தை படிப்பின்மையிலிருந்து மீட்க வேண்டியது யாருடைய கடமை?

வெள்ளையர் ஆட்சிக்குப் பிறகு பதவிக்கு வந்திருக்கும் காங்கரஸ் ஆட்சியிலும் திராவிடர் கல்வி நிலையில் ஒரு சிறு மாற்றங்கூடக் காணமுடியவில்லை. வார்தாக் கல்வித் திட்டம் என்றும், அடிப்படைக் கல்வித் திட்டம் என்றும், எட்டளவுத் திட்டங்கள் இருப்பதைத் தவிர நடைமுறையில் விரைவில் கல்லாமையை ஒழிக்கும் திட்டம் எதுவுமேயில்லை.

கல்விக்கு அடிப்படையாயிருப்பது மொழி. மொழியைப் பற்றியே காங்கரஸ்காரர் ஒரு முடிவுக்கு வரக் காணோம். இங்கிலீஸ் தேவையேயில்லையென்று சிலரும், கொஞ்சம் இருந்தால் போதுமென்று சிலரும், படிப்படியாக ஒழித்துவிட வேண்டும் என்று சிலரும், நாகரி எழுத்துள்ள ஹிந்தியே தேசிய மொழியென்று சிலரும், உருது எழுத்திலுள்ள ஹிந்துஸ்தானியே இருக்க வேண்டுமென்று சிலரும்—இவ்வாறு பிச்சைக்காரன் வாந்தியெடுத்தது போலக் கூறி வருகின்றனர்!

இந்நிலையில் ரீவாவில் நேற்றுமுன் தினம் கூடிய அகில இந்தியக் கல்வி மாநாட்டில் விபரீதமான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றனர்:—

உயர்தர வகுப்பு (ஹைஸ்கூல்) வரையில் தாய்மொழியில் கல்வி போதிக்கப்பட வேண்டுமாம். கல்லூரிகளில் ஹிந்தி மூலம் கற்றுக் கொடுக்க வேண்டுமாம். இங்கிலீஸ் சர்வதேச மொழியாகையால் ஹைஸ்கூல்—காலேஜ் ஆகிய இரண்டிலும் அது கட்டாயப் பாடமாக இருக்க வேண்டுமாம். இதுமட்டுமா? கீழ்த்தர வகுப்புகளிலும் கல்லூரி வகுப்புகளிலும் சமஸ்கிருதம் படிப்பதற்கும் போதிய வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமாம்.

தாய்மொழி—ஹிந்தி—இங்கிலீஸ்—சமஸ்கிருதம் ஆகிய நான்கு மொழிகள்! ஒன்று வீட்டிற்காக. ஒன்று தேசத்திற்காக. ஒன்று வெளி நாடுகளுக்காக. ஒன்று மோட்சத்திற்காக! எனவே மனிதனின் ஆயுள் பல மொழிகளைக் கற்றுக் கொள்வதில் மட்டுமே செலவழிக்கப்படும். அவனுக்கு வேறு தேவைகளைப் பற்றிக் கவலையே இல்லையா? இந்த ஆலோசனை எந்த மாதிரி மக்களுக்கு, என்பதே நம் கேள்வி. அளவுக்கு மீறி உண்டுவிட்ட படியால் அதை ஜீரணிக்கப் பூர்ணாதிலேகியமும் போதாமலிருப்பவனுக்குச் சந்தனம் தேவை, உடம்பில் பூசிக் கொள்ள! ஆனால் இரண்டு நாள் பட்டினியாயிருப்பவனுக்கு சந்தனம் எதற்கு? சமஸ்கிருதம் ஹிந்திக்குத் துணை; இது அதற்குத் துணை. ஆகையால் இரண்டு மொழிகள். பிறகு அறிவு பெறுவதற்காக இங்கிலீஸ். பிரதேசமொழி என்பதற்காக அந்தப் பிரதேச மக்களுடன் பேசுவதற்குத் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராட்டியம், வங்காளம் போன்ற ஏதோ ஒரு மொழி! இதெல்லாம் ஆரியக் கூட்டத்திற்கு சரி! ஆனால் தாய்மொழியே எழுதப் படிக்கத் தெரியாத 100-க்கு 90-ஆகவுள்ள திராவிட இனத்தாருக்கு எப்படி முடியும்? இவர்களில் பெரும்பாலோர் ஏழைகள்; வயதுக் குழந்தைகள்கூட வேலை செய்தால்தான் வாழ முடியும் என்ற நிலையிலுள்ளவர்கள். அன்னச் சத்திரமோ, கோவிலோ, பஜனை மடமோ போன்ற தண்டச் சோற்று வசதியில்லாத உழைப்பாளிப் பாமரர்கள். இவர்கள் எப்படி இந்த நான்கு மொழிகளையும் படிக்க முடியும்?

மேலும் இவர்கள் கூறும் ஹிந்தி என்பது வடநாட்டானுடைய (அதுவும் ஒரு சிறு கூட்டம்) தாய்மொழியாகும். இதைத் திராவிடன் ஏன் கற்றுக்

# ஸ்தல மகிமைப் போராட்டம்.

## எது நிஜம்?

★

உலகத்தில் மக்களாய்த் தோன்றிய அனைவருக்கும் இன்றியமையாதன வாகக் கூறப்படும் பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு என நான் கென்றும், இவற்றுள் வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின், அதனையடையும் மார்க்கங்கூறுவதல்லது, வீடென்பது இன்னது, இப்பெற்றித்து என்று கூற முடியாதென்பதும் பழைய நூலாசிரியர் கொள்கையாகும்.

இங்ஙனமாகியவீட்டை அடைவதற்குரிய சாதனங்கள் எண்ணிறந்தனவாகச் சான்றோர் என்பவர்களால் கூறப்படுகின்றன. அவை காயத்திரி மந்திரம் செபித்தல், ராமா எனல், கிருஷ்ணா எனல், சிவா எனல், விபூதி பூசுதல், நாமமிடுதல், தீர்த்தமாடுதல், தோத்திரம் பாடுதல், அநுஷ்டானம் முதலியன செய்தல், பெரியாரைக்காணல், அவர்பால் உபதேசம் பெறுதல், அதன்படி நடத்தல், விக்கிரக ஆராதனை செய்தல், சிவதலம் செல்லல், சிவதலத்தை மனதால் நினைத்தல் முதலானவைகளாகும். அவைகளில் ஸ்தலங்களில சென்று ஆங்குள்ள கடவுள்களைத் தரிசித்தலும் ஒன்று. இங்ஙனமாய ஸ்தலங்களில் மூர்த்தி விசேடம், தீர்த்த விசேடம், ஸ்தல விசேடம் என்று மூவகையான விசேடங்கள் உண்டென்றும், ஒவ்வொரு ஸ்தலங்களில் ஒவ்வொரு விசேடம் சிறந்ததாகவிருக்குமென்றும் புராணிகர்கள் கூறுவதுண்டு.

இங்ஙனங்கூறப்படும் ஸ்தல விசேடத்தைக் கூறவந்த புராணிகர்கள் தங்கள் புத்தியால் எவ்வளவு பொய் சொல்லக்கூடுமோ அவ்வளவுங்கூறியே விடுவார்கள். எவ்வாறெனில் ஏதாவது ஒரு தலத்தைப்பற்றி பாடநினைத்தால் அதுவே உலகில் சிறந்ததென்பார்கள். உதாரணமாக அருணையைப்பற்றிக் கூறும்போது

அருணாசலப் புராணத்தில்,

"சத்தபுரியே முதலெடுத்ததலம்யாவு
 மொரு தட்டுமொரு தட்டதனிலே,
அத்தலமுமிட்டெதிர் நிறுக்கவவைகட்
 கதிகமான தொளிரந்த நகரம்,...."
(திருநகரச் சருக்கம் 20)

(இ—ள்) அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகையாகிய ஏழு தலங்களையும் ஏனைய தலங்களையும் துலாக்கோலின் ஒரு தட்டிலும், திருவண்ணாமலையை ஒரு தட்டிலும் வைத்து நிறுக்க, அண்ணாமலையானது அத் தலங்களைவிட அதிகப்பாரமுடைய தாயிருந்தது.

இது சரிதானா? என்று காய்தல் உவத்தலின்றி நடுநிலைமையாக யோசித்துப்பாருங்கள். உலகத்திலுள்ள தலங்களெல்லாவற்றிலும் மேற்கண்ட ஏழு தலங்களுமே சிறந்தனவென்று கூறுகிறார் மற்றொரு புராணக்காரர். திருவண்ணாமலைக்கு வருகின்ற மக்களிடம் எல்லாத் தலங்களிலும் இதுவே சிறந்ததென்று கூறி, தனக்கு மிகுதியாகப் பொருள் வரும்வழியைச் செய்ய வேண்டிய அவசியம் அவ்வூர்க்கோயிற் பார்ப்பானுக்கு உரியதாகலாம். புராணக்காரருக்கு அவ்வாறு கூறவேண்டிய அவசியமென்ன? அவ்வாறு தராசில் வைத்து நிறுத்துப்பார்ப்பதற்குத் தகுதியானவன் யார்? நான்முகன் நிறுத்ததாகக்கூறின் அவருக்கு நிறுக்க வேண்டிவந்த அவசியமென்ன? தலங்களையெல்லாம் யாருக்காவது விற்றுவிடப் போகின்றாரா? தான் படைத்த தலங்களையே அளவு தெரியாது நிறுத்துப் பார்ப்பதனால் அவரைக் கடவுளென்று கூறமுடியுமா? இயற்கைக்கு மாறாக ஆகாயப்புளுகுகளைக் கூறியிருக்கும் இதற்கும், முயற்கொம்பில் ஏறிநின்று ஆகாயத்தாமரை மலரைப்பறித்து ஆமைமயிர்க்கம்பளத்தில் அடக்கம் செய்தான் என்று கூறுதற்கும் ஏதாவது வேறுபாடுண்டா? பார்ப்பனர்கள் தங்கள் தலங்களுக்கு எல்லா மக்களும் ஓடிவரவும், அதனால் தாங்கள் பொருள் அடையவும் செய்த சூழ்ச்சியைப்போன்றே யிருக்கிறது. இதைப்போலவே மதுரையைப்பற்றிய திருவிளையாடற்புராணத்தில்,

"கைத்தலகமலமிருந்திடைய மலர்க்
 கடவுள் மேல்லாநாள் கைலையாதி
எத்தலமும் ஒருதுலையிட்டுத்தலமு
 மொருதுலையிட்டெண்ணித் தூக்கி,
உத்தமமாத்திரைவாலவாய் மிகவுங்
 கனத்ததுகண் டெங்கின்மேலா,
வைத்ததலம் இதுவெனநால் இதன் பெ
 ருமை யாவரே வழுத்தற்பாலார்"
(தலவிசேடம்—20)

(இ—ள்) நான்முகன் முன்னொருநாள் கைலை முதலிய எல்லாத் தலங்களையும் துலையின் ஒரு தட்டிலும், மதுரையை மற்றொரு தட்டிலும் வைத்து நிறுக்க, எல்லாத் தலங்களிலும் மதுரையே கனத்தது.........

இந்தப் புராணக்காரர் பெரும்புளுகு புளுகுகின்றார். நான்முகன் கைலை மலையையும் சேர்த்து நிறுத்துப் பார்ப்பதாகக் கூறுகின்றார். திருவண்ணாமலையின் முடியைக் காண மாட்டாதவராகிய நான்முகன், திருவண்ணாமலை முதலிய தலங்களையெல்லாம் தூக்கி வைத்துத் தராசில் நிறுக்க முடிந்ததெப்படி?

இதைப்போலவே திருவாரூர்த்தல புராணக்காரர்,

"தரையிலூரனைத்துமொரு பெருந்
 தட்டில்
தந்தொரு தட்டினில் கமலா
புரியெனும் பதிதந்தானருளாதனால்
 நிறுப்பவப் பொன்னகர்
கனத்தில், ஒரு பதினாறு பங்கில்
 ஒன்றேனும்
உலகிலூரனைத்தும் நின்றில......"

(இ—ள்) பூமியிலுள்ள எல்லா நகரங்

[தொடர்ச்சி 13ம் பக்கம்]

கொள்ள வேண்டும்? அதன் இலக்கியத்திற்காகவா? விஞ்ஞானச் செல்வத்திற்காகவா? வடநாட்டுடன் தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டிய காங்கரஸ் தலைவர்கள், ஒரு சில வியாபாரிகள், இரண்டொரு உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் மட்டுமே ஹிந்தி கற்றுக் கொண்டால் போதாதா? இதற்காக எல்லா மக்கள் தலையிலும் இதை என் வலுக்கட்டாயமாகச் சுமத்த வேண்டும்? அடுத்தபடி சமஸ்கிருதம். இப்படி ஒரு மொழி எங்கேயிருக்கிறது? யார் பேசுகிறார்கள்? இதனால் ஆரியர்களுக்கு கொழுத்த லாபமுண்டு. ஆனால் திராவிடர்களுக்கு என்ன பயன்? ஒரு முஸ்லிமோ, ஒரு கிருஸ்துவரோ, ஒரு ஷெட்யூல் வகுப்பாரோ, அல்லது வேறு ஒரு செட்டியாரோ, முதலியாரோ, நாயுடுவோ சமஸ்கிருதத்தைப் பயின்று என்ன செய்யப் போகிறார்? சொந்தத்திலேயே தர்ப்பணம் செய்து கொள்ளலாம் என்பதைத் தவிர வேறு எதற்கு?

எனவே, அவரவர் தாய் மொழியையும், உலக அறிவுப் பொக்கிஷமான இங்கிலீஸ் மொழியையும் தவிர வேறு எந்த மொழியும் பள்ளிகளிலோ, கலாசாலைகளிலோ கற்பிக்கப்பட வேண்டியதேயில்லை. தேவையானவர்கள் ஹிந்தி மட்டுமல்ல, சமஸ்கிருதமோ, லத்தினோ, கிரீக்கோ, புஷ்டுவோ, பிரஞ்சோ, ஜர்மனோ, ரஷ்ய மொழியோ—எதை வேண்டுமானாலும் சொந்தமுறையில் கற்றுக் கொள்ளலாம். இவைகளில் எதற்காகவும் பொதுஜன வரிப்பணத்தில் ஒரு பைசாக்கூடச் செலவாகக் கூடாது. அப்படிச் செலவளிக்கப்பட்டால், திராவிட இனத்தைக் கல்வித் துறையில் பட்டினி போட்டுவிட்டு அவர்கள் துடிக்கத் துடிக்க, ஆரிய இனத்திற்கு அறுசுவை உண்டி அளிக்கும் மாபாதகச் செயலேயாகும். இம்மாதிரி முயற்சியைத் திராவிடர் எதிர்த்தே தீர்வர். இம்மாகாண ஆட்சியாளர் இதை ஒரு எச்சரிக்கையாகக் கொள்ளாவிடினும் ஆலோசனையாகவேனும் கொள்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

### கல்வி முறையா?
### சர்க்கஸ் வேடிக்கையா?

ரோஜா முத்தையா

கதை கற்பனை.

சிறுகதை

முதற்பருவம்.

# குற்றவாளி யார்?

போட்டி

எண் 3.

‘‘ஆண்டவரே! என் பாபச் செயலுக்காக என்னை மன்னித்து விடுங்கள். வேறு வழியில்லை. இதைச் செய்யப்போகிறேன். என்னைக்காட்டிக் கொடுக்காது துணை நின்று காப்பாற்றுங்கள்; ஆண்டவரே!!........’’ கோயிலின் ஒரு கோடியிலே கண்ணீர் பெருக வேலன் வேண்டிக்கொண்டிருந்தான். அவன் கண்களில் துளிர்த்த கண்ணீர் ஆண்டவன்பால் கொண்டுள்ள அன்பினால் பெருகியவை அல்ல. ஆண்டவனைக் கண்டு அழுது நீர் சொரிய அவனுக்கு அவ்வளவு அன்பு பெருகி ஆறாக ஓடவில்லை. ஆனால் அவன் அழுத கண்ணீர்த்துளி ஒவ்வொன்றும், ஆற்றாது அலறித்துடித்த, அவன் குடும்பத்தை எண்ணித்தான். பாலின்றிப் பரிதவித்த பச்சிளங் குழந்தையும், வயிற்றுக்குணவில்லாது வயிறு இழுத்துப் பிடிக்க அவதிப்பட்ட அவன் மனைவியும், நோயுற்று நெளிந்த செல்வப் புதல்வனுமே அவன் கண்முன் நின்று தாண்டவமாடினர். காப்பாற்ற வழியற்றுக் கண் கலங்கிய வேலன், ஆண்டவனை அண்டினான். வகையற்ற வறியோன், வையத்துப் படைப்பாளனைத் துணை நாடினான், அவன் செய்யப் புகுந்த வேலைக்கு.

வேலன் எத்தனையோ சமயங்கள் அந்தக் கோயிலிலே ஆண்டவனை வேண்டி நின்றிருக்கிறான். அவைகளின் நிலையே வேறு. அன்றெல்லாம் அவன் ஆண்டவனை ஏதாவதொரு வேலையை அவனுக்கு அருள்பாலிக்குமாறு வேண்டுவான். ஆனால் இன்று அவன் செய்யப்போகும் காரியத்துக்குத் துணை புரிய வேண்டுமென்றுவேண்டினான். அன்று அழுத கண்ணீருக்கு ஆதரவு கொடுக்குமாறு வேண்டினான். இன்று ஆக்க வேலைக்கு ஆண்டவனையே துணை நிற்குமாறு வேண்டினான். நிலைமை அப்படி மாறிவிட்டது.

கண்ணீர் விட்டுக் கலங்கிய வேலன், தன் குடும்பத்து நிலையை மனதாலே ஆண்டவனுக்கு கவனப்படுத்தினான். ‘‘என் மனைவி சுகமாகயிருந்திருந்தால், அவளையாகிலும் விபசாரம் செய்ய விட்டு என் குடும்பத்தைக் காப்பாற்றுவேன். இந்தத் திருட்டை உம் சன்னிதியின் முன் செய்வதைக் காட்டிலும், அதுவே மேலாக எண்ணியிருப்பேன். ஆனால் ஆண்டவனே......!’’ மனதுக்குள்ளே கூறிக் கலங்கிக் கொண்டிருந்த வார்த்தையைக் கேட்ட கல்லும்கூட உருகியிருக்கும். ஆனால் ஆண்டவர் அசையவில்லை. அய்யனின் அருளை நாடி நின்றவனுக்கு, அய்யர் ஒரு துளி சாம்பலைத் தூக்கி கைக்குள் எறிந்தார். ஆண்டவனின் ஆசீர்வாதம் கிடைத்து விட்டதாக எண்ணி வெளியே வந்தான் வேலன்.

* *

கோயிலிலே அன்று பெருங் கூட்டம். அய்யன் அருளைப் புகழ்ந்து போற்ற விழா. பெரும் திரளான மக்கள் கூடியிருந்தனர். பக்தன் எனப் பெயர் பெற விரும்பிய அன்பர்களும், பாதகச் செயலுக் கஞ்சாத பட்டைப் பூசியவர்களும், கண் வேட்டைக் காளைகளும், இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ள எண்ணிவந்த காமுகர்களும், தடையின்றிக் கருத்துகள் பரிமாறஎண்ணிவந்த இளங்காதலர்களும், கெண்டை விழிக் கோமளவல்லிகளும், இடை துவளும் இன்ப சரசிகளும், நகை காட்ட, நடை தளர நடந்து வரும் நாரீமணிகளும், சமயத்தில் அகப்பட்டதைச் சுருட்ட எண்ணிய ஏகாங்கிகளும், இன்ன பல ரகங்கள் கூடியிருந்த குழு. இன்பவல்லிகளின் அங்கங்கள் பட, உரசிச்செல்லும் சிங்காரர்களுக்குச் சிறந்த வேட்டை. வலிய வரவழைத்துக் கொள்ளும் மகிழ்ச்சிகளும், வலிய வந்தடையும் துன்பங்களும் கண்கொள்ளாக் காட்சி. இன்பமும், துன்பமும், வாழ்க்கையில் சகஜம் என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைந்து இருப்பவை ஆண்டவனின் அன்பு விழாக்கள்.

கூட்டத்தின் இடையே ஒரு பெண்- சாந்தா கண்ணீர் பெருக, பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். இளமை ததும்பிய அந்த மலர் வதனத்தில் சிறிது வாட்டம் இருந்தது. ஏதோ ஒரு குறையை யெண்ணி வேண்டிக் கொண்டிருந்தாள். அவள் வாய்விட்டுப் பேசிக் கொண்டிருக்கவில்லை; அவள் மனம் பேசியது. ‘‘ஆண்டவனே! என் இன்ப வாழ்விலே ஏன் இவ்வித இடரைக் கலக்குகிறீர். என் வாழ்க்கையை ஏன் பாலைவனமாக்குகிறீர். ஆபத்பாந்தவா, என் கணவனை எனக்கு அளியுங்கள். அவரையடைய எனக்கு அழகைக் கொடுத்தருளும். பாக்கியத்தை வெறுத்துத்தள்ளுமளவு என் அழகை சிறக்கச் செய்து என் கணவரையடைய வழி செய்யும். ஆண்டவரே........’’ ஏதேதோ வேண்டிக் கொண்டிருந்தாள். அவள் வார்த்தை ஒவ்வொன்றும், அவளுக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தோய்ந்து வெளிப்பட்டது. அவள் நம்பிக்கை, அவள் வாழ்க்கையின் வளத்தைத் தெரிழிப்பவை. அதை எண்ணியே ஆண்டவனை வேண்டினாள்.

சாந்தாவின் கண்ணீர் சபலத்தால் சிந்தியதல்ல. உண்மையில் எழுந்த உணர்ச்சி. சாந்தாவின் கணவன் சேகரன் ஒன்றும் அவ்வளவு குரூர குணமுள்ளவனல்ல. அவள் கண்ணீர் சிந்துமளவு கொடுமையாக நடந்து கொள்ளுபவனுமல்ல. ஆனால் அவன் அன்பு சாந்தாவைக் காட்டிலும், பாக்கியத்திடம்தான் அதிகமாயிருந்தது. அதுதான் சாந்தாவிற்கு பொறுக்கவில்லை.

சேகரன் பாக்கியத்திடம் அன்பு கொள்வதற்கு முன் சாந்தாவிடம் எவ்வளவோ அன்பாக நடந்திருக்கிறான். அவன் காதல் மொழியில் மயங்கியிருந்த சாந்தா, இன்றும் அதை நினைத்துக் கொண்டால் பெருமிதம் கொள்ளுவாள். எவ்வளவு அன்போடு சாந்தாவிடம் பழகினானோ, அவ்வளவு அன்பையும் பாக்கியத்திடம் மாற்றிவிட்டான் சேகரன். அதற்கு காரணம் சாந்தாதான் என்று குற்றம் சாட்டினர், செய்தி அறிந்தவர்கள். அதிலும் உண்மை இல்லாமல் போகவில்லை.

சாந்தாவிற்குக் கொஞ்சம் நகைப் பித்து! அவன் அன்பொழுகப் பேசுவான். இனிமையிலே கசப்புக் கூட்டுவதுபோல் அவள் நடந்து கொள்வாள். அன்பைப் பாக்கியத்திடம் மாற்றிக் கொண்டான்.

‘‘சாந்தா! நீ இன்று எவ்வளவு அழகாயிருக்கிறாய்!’’ என்று உண்மையான அன்பில் கூறுவான். ‘‘ஊம்’’ என்று அழகுக் காட்டுவாள். அவள் அவன் அணைப்பிலிருந்து கொண்டே கூறுவாள்; ‘‘அந்த வைரத்தோடு, அன்று பார்த்தோமே சங்கரன் செட்டி கடையில், அது எவ்வளவு அழகாயிருந்தது ........அதுபோல் எனக்கும்......!’’ இனிப்பிலே கசப்புக் கலப்பாள். இதைப்போலக் கேட்டுக் கேட்டு அவனுக்குக் கசப்பேறிவிட்டது. எவ்வளவோ நகைகள் வாங்கிக் கொடுத்தான். ஆனால் அவளுக்குத் திருப்தியில்லை. சேகரனுக்கும் சலிப்பே தட்டிவிட்டது.

அந்தச் சமயத்தில்தான் எதிர் வீட்டு பாக்கியம், சேகரனின் அன்பைச் சேகரித்துக் கொண்டாள். அவள் ஒரு குடும்பத்துப் பெண்தான். ஆனால் குடும்பத்துப் பெண் என்ற பெயர் போய் எத்தனையோ ஆண்டுகள் ஆகி

[தொடர்ச்சி 12ம் பக்கம்]

# புரட்சிப் புயலில்?

★

புரட்சி ஒரு இயங்குஞ் சக்தி. புரட்சி, இயற்கையின் வழிவரும் ஒரு மாபெரும் சக்தி. புரட்சி மக்களின் போராட்ட அடிப்படை. புரட்சி, கோடிக் கணக்கான, மாணவ, வாலிப உள்ளங்களின் குருதியில் தோய்ந்த, செந்நீர். புரட்சி, சீர்திருத்தவாதிகளின் ஆயுதம். புரட்சி, உரிமைப் போரின் ஒளி. புரட்சி, இரத்தப் புயல் வீசும் போர்க்கடல். புரட்சி தியாகத்தின் சிகரம். அதுவே, வாளின் முனை. அதுவே, பகுத்தறிவாளரின் சிந்தனைக் கடல். பழமையின் விரோதி. சர்வாதிகாரர்களுக்கு சாட்டை. ஆளவந்தார்களுக்கு நஞ்சு.

இப்படிப்பட்ட ஒரு இயல் சக்தியை, "அடக்கு முறை" என்ற ஆயுதத்தால் அடக்கி ஒடுக்கி அழித்து விட, முயன்றவர்கள் இதுவரையில் ஒருவரல்ல இருவரல்ல, ஆயிரக்கணக்கான அதிகார பரம்பரையின் வழிவந்த மன்னர் தம்பதிகள் முயன்று, முயன்று பார்த்தனர். ஆனால் அம் முயற்சி, விழலுக்கிரைத்த நீர்போல வீணாகத்தான் முடிந்தது.

இதற்கு வேண்டுமானால், நூற்றுக் கணக்கான சான்றுகள் எடுத்துக் காண்பிக்க எங்களால் இயலும். ஆம்! புரட்சிப் புயலைக் கண்டு மருட்சி கொண்ட ஆயிரமாயிரம் ஆளும் வர்க்கத்தினர், அடக்கு முறை என்ற விசித்திரமான சக்தியால், அதனை அழித்துவிடமுடியும் என்று இறுமாந்து இருந்தனர். ஆனால் அத்தனை பேரும், மக்களால் மண்மேடாக்கப்பட்டார்கள் என்பதை இன்றும் நாம் சரித்திரத்தில் காண்கிறோம்.

இரஷ்ய நாட்டையே இரணகளமாக்கிய ஜார் மன்னனின் யதேச்சாதிகாரம், மக்கள் செய்த புரட்சியின் முன் மண்டியிடவில்லையா?

ஏன், அவ்வளவு தூரம் செல்வானேன்? இந்த நாட்டிலே வியாபாரம் செய்யவந்த வெள்ளையன், நாளடைவிலே அரசியலைக் கைப்பற்றியதும் என்ன செய்தான்? என்ன நினைத்தான்?

"நாம் இந்நாட்டை ஆள்வதையும், அடக்குவதையும், ஈங்கிருக்கும் செல்வக் களஞ்சியங்களை சுரண்டுவதையும், இந்நாட்டு மக்கள் அறியக் கூடாது; அதாவது இந்தியரை, அவ்வளவு தூரம் முன்னேற விடக்கூடாது. அப்படி ஒருக்கால் இந்தியர்கள் தெரிந்து தெளிந்து விட்டால் சுதந்தரக் கீதம் கிளம்பிவிடும். அதைநம்மால் இலேசில் சமாளித்து விட முடியாது."

என்று தானே, எண்ண இயலாத எண்ணற்ற எண்ணங்களை நெஞ்சிலே எண்ணினான். செய்கையிலும் அப்படித்தானே செய்தான்.

ஆனால், அவனுக்காகக் காலவேகம் ஸ்ட்ரைக் செய்ததா? அவன் எண்ணிய எண்ணம் ஈடேறியதா? மாறாக, நாட்டிலே சுதந்தரக் கீதம் கிளம்பத்தானே செய்தது. "வெள்ளையனே! வெளியே போ!!" என்ற கோஷங்கள், காதுகளில் ஒலிக்கத்தானே செய்தது. அன்னியத் துணிமணிகளை—வெளிநாட்டுப் பொருள்களை ரௌலட் சட்டங்களைப் பகிஷ்காரம் செய்யத்தானே நேர்ந்தது. செக்கிழுத்த சிதம்பரனார் முதல் கொண்டு, கொடியேந்தி உயிர்விட்ட தியாகக் குமரன் முதல் கொண்டு பல்லாயிரக் கணக்கான இந்திய தேசியவாதிகள் தங்கள் உயிர்களையும், தேசத்துக்காக-உரிமைக்காக இழக்கத்தானே நேர்ந்தது.

அதன் பலன்தானே ஆகஸ்டு 15.

மக்களுக்கு இந்த உணர்ச்சி எங்ஙனம் வரலாயிற்று? காலப் போக்கு மக்கள் மன்றத்திலே, கவின் பெற்ற கருத்துக்களைத் தோற்றுவித்தன அல்லவா? அதன் பேரில் ஆளும் வர்க்கத்தினர்—அரச பரம்பரையினர்—அழிக்கப்படவேண்டும். எங்கும், குடியாட்சி—மக்களாட்சி—ஏற்படவேண்டும் என்ற அரிய பெரிய எண்ணங்கள், இந்த நாட்டு ஏந்தல்களின் உள்ளத்திலே ஊடுருவியது.

இந்த இயற்கை எண்ணங்களைத் தவிடு பொடியாக்க, வெள்ளையன் கையாண்ட வழிகளை எண்ண இயலுமா? இயலவே இயலாது. அந்த வழிகளிலே, அடக்கு முறையும் ஒன்று. ஆனால் அடக்கு முறையினாலோ, மற்ற வேறு குள்ளநரிச் செயல்களாலோ, அந்த நாளிலே, காங்கரஸ் ஸ்தாபனம் அழிக்கப்படவில்லை, அழிக்க முடியாது என்ற காரணத்தால்!

ஏன்?

புரட்சி அவ்வளவு வலிமை வாய்ந்தது.

இதனை, இந்தநாள் காங்கரஸ் திராவிடத் தோழர்களுக்கு—குறிப்பாக ஓமந்தூராருக்கும், கனம் டாக்டர் சுப்பராயனுக்கும் நன்கு தெரியும். தெரிந்திருந்தும்கூட, தங்கள் உரிமைகளைக் கேட்கும் கருஞ்சட்டையினரின் மீது (?) அடக்குமுறை, வீசியிருப்பது—இன்னும் அதைத் திரும்பப்பெறாதது வருந்தற்குரிய சேதியாகும்.

திராவிடக்கழகத்தவர் இதுவரையில் தங்கள் உரிமைகளை அகிம்சையின் மீதே கேட்டு வருகின்றனர். அதற்கான ஆக்கங்களைச் செய்தும் வருகின்றனர். இன்னும் சொல்ல வேண்டுமானால், திராவிடர் கழகத்தவர் அகிம்சையின்மீது பற்றுக்கொண்டுள்ள அளவுக்குக் காங்கரசாரும் கொள்ளவில்லை என்பது வெள்ளிடைமலை.

திராவிடர் கழகத்திற்குக் கத்தியும் இல்லை, கபடாவுமில்லை. போர்ப்பயிற்சியுமில்லை, போர்த்தளவாடங்களுமில்லை. கருஞ்சட்டையினர் கேட்பது உரிமை. அதனை அவர்கள் பெற்றுவிட்டால் மற்ற எல்லாப் புல்லுருவிகட்கும், கண்மூடித்தனத்திற்கும் சாவுமணி அடிக்கப்பட்டு விடும் என்பதில் அய்யமில்லை. திராவிடர் கழகம் அந்த அளவிலேதான் அதிகச் செல்வாக்குடன் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. இது சில வழிகாட்டிகளுக்கு (?) ஏனோ பிடிக்கவில்லை. இந்த நிலையிலேதான் அன்றொருநாள் பத்திரிகையில்,

"திராவிடர் கழகம் வகுப்புவாத ஸ்தாபனமாகக் கருதப்படுவதால், அதன்மீது தடையுத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது"

என்று கண்டோம். இது உண்மைதானா? வகுப்பு வாதத்தையே அறவே ஒழிக்கவேண்டும் என்றல்லவா திராவிடர் கழகம் கூறுகி

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

நூலக அறக்கட்டளை

# உடனடியான நடவடிக்கை வேண்டும்!

## ஆட்சியின் போக்கைக் கண்டிக்கிறோம்!

### திருச்சி நிர்வாகக் கமிட்டி செய்திருக்கும் முடிவுகள்.

★

(நமது நிருபர்)

திருச்சி 24-7-48.

இன்று காலை பத்து மணிக்குத் தலைவர் வேதாசலம் அவர்கள் இல்லத்தில், திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் முன்பு அறிவித்திருந்தபடி நடந்தது. நிர்வாகக் கமிட்டியினர் அல்லாத பல நூற்றுக்கணக்கான இயக்கத் தொண்டர்களும் இக்கமிட்டிக் கூட்டத்தில் காணப்பட்டனர். எங்கும் எழுச்சியோடு நிர்வாகக் கமிட்டி எத்தகைய முடிவைச் செய்யும் என்று எதிர்பார்த்துக் கொண்டு தொண்டர்கள் காத்து நின்றனர். தொடக்கத்தில் தோழர்களான என். ஜீவரத்தினமும், ஏ. வி. பி. ஆசைத்தம்பியும் நிர்வாகக் கமிட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று தலைவர் பெரியாரவர்கள் அறிவிக்க, அது மற்ற நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களால் ஒப்புக் கொள்ளப் பட்டபின், தலைவர் வேதாசலம் அவர்கள் கூட்டம் கூடியிருப்பதின் நோக்கத்தையும் நிலைமையையும் விளக்கிக் கூறினார்கள். பெரியாரவர்கள் ஆட்சியாளரின் போக்கு, தரப்பட்டிருக்கும் சந்தர்ப்பம் ஆகியவைகளை விளக்கி ஒவ்வொருவரும் அபிப்பிராயம் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதன் பின் தாராளமாகக் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. முதலிரண்டு தீர்மானங்கள் பகலுணவுக்கு முன் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு, பிறகு 2½-மணிக்குக்கூடி பின் இரண்டு தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன. கூட்டத்திற் கலந்து கொண்ட நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள்:—

தோழர்களான (1) தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி, (2) டி. பி. வேதாசலம், (3) கெ. ஜெகதீசன், (4) ரோசு அருணாசலம், (5) ஜி. பி. சோமசுந்தரம், (6) ஈ. திருநாவுக்கரசு, (7) பா. சிதாபதி, (8) சி. முனுசாமி, (9) ஜி. பராங்குசம், (10) ராஜசேகரன் பி. எ. பி. எல்., (11) எஸ். நீதிமாணிக்கம், (12) மத்திரன், (13) ரங்கராஜு, (14) பட்டுக்கோட்டை பாலகிருஷ்ணன், (15) கெ. கெ. நீலமேகம், (16) சி. டி. டி. அரசு, (17) கே. கோவிந்தசாமி, (18) என். வி. நடராசன், (19) ஆனைமலை நரசிம்மன் பி. ஏ., (20) ஈரோடு பி. சண்முகவேலாயுதம், (21) என். ஜீவரத்தினம், (22) ஏ. வி. பி. ஆசைத்தம்பி, (23) க. அ. மணி ஆகியோர்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

(1) விடுதலைப் பத்திரிகையானது சட்ட வரம்புக்குட்பட்டு அமைதியைக் கொஞ்சமும் கெடுக்காத வழியில், பலாத்காரத்திற்குச் சிறிதும் இடம் ஏற்படாமல் திராவிடமக்களுக்குத் தங்கள் இழிவு நீங்கவும், கல்வி, தொழில், பொருள் வகைகளில் உயரவும், அரசியல் நிர்வாகம் இவைகளில் விகிதாச்சார உரிமைகள் பெறவும், நல்ல முறையில் பணியாற்றியும், மத்திய அரசாங்கம், சென்னை அரசாங்கமீதும் ஒருவகையிலும் துவேஷம் ஏற்படுத்தாது, குறைகளையும், தேவைகளையும் எடுத்துக் காட்டி வகுப்புத் துவேஷம் உண்டாக்காது, பார்ப்பனீயத்தினின்றும் மூடநம்பிக்கைகளினின்றும் மக்கள் விடுதலையடைவதைக் குறிக்கோளாகக் கொண்டு வேலை செய்து வருவதையும் அரசாங்கம் உணராது விடுதலைப் பத்திரிகைக்கு ஜாமீன்கேட்டிருப்பதின் மூலம் அடக்குமுறை ஆரம்பத்திருப்பதை இக்கமிட்டியார் வன்மையாகக் கண்டிக்கிறார்கள்.

2. சென்னை அசாங்கம் Indian Press Emargency Act 1831 செக்ஷன் 7 (கிளாஸ் 3) படி விடுதலைக்கு ஜாமீன் கேட்டு அனுப்பியிருக்கும் எடுத்துக்காட்டு ஆதாரங்களும் கவனிக்கப்பட்டன. அவ்வாதாரங்களில் கண்டுள்ள வியாசங்களும் சொற்பொழிவுகளும் குறிப்புகளும் குற்றமுடையவைகளாக, அரசாங்கம் கொண்டிருப்பதைப் பார்த்தால், திராவிடக் கழகக் கொள்கைகளை நிறைவேற்ற அதற்கான பிரசாரம் செய்யவோ, பத்திரிகை மூலம் எடுத்துக்காட்டவோ கூடாதென்று அரசாங்கம் கருதி அடக்குமுறை மூலம் தடுக்க முடிவு கட்டியிருப்பதாக இக்கமிட்டியார் உணருகிறார்கள்.

(3) எனவே மேலால் கண்டபடி கழகத் திட்டங்களைப் பிரசாரம் செய்ய முடியாத தடுப்பு முறைகளைச் சர்க்கார் மேலும் கையாண்டால் அவைகளைச் சமாளிக்க நாம் என்ன செய்வது என்பது பற்றி யோசிக்க வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டு விட்டது என்பதை நிர்வாகக் கமிட்டி கருதுவதால் அதற்கான திட்டங்களையும், வழிமுறைகளையும் வருத்துக்கொடுக்கவும், உடனடியான நடவடிக்கைகளை எடுக்கவும்தலைவர் பெரியார் அவர்களுக்குச் சகல அதிகாரங்களையும் இக்கமிட்டி அளிக்கின்றது.

(4) 1—7—48ம் நாள் திராவிட நாடு பிரிவினை நாளாகக் கழகத்தினர் கொண்டாடவேண்டுமென இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

---

## எந்த மன்னருக்கு?

★

அசோக மன்னனுக்கு பிறகு அகண்ட இந்தியாவின் முதல் அதிபதியாகும் இந்தியர் ராஜாஜிதான்.

"தினமணி"

மன்னர் வாழ்த்துப்பாடி "ஜன கணமன" கீதம் பாடிய பிறகு மஞ்னாது ஸ்ரீமுகத்தை உள்நாட்டிலாக்கா காரியதரிசி ஸ்ரீ ஆர். எம். பானர்ஜி வாசித்தார். இந்தியாவின் பிரதம நீதிபதி சர் ஹீராலால் கானியா விஸ்வாசப் பிரமாணச் சடங்கை நடத்தி வைத்தார்.

"தினமணி"

அசோகன் ஆண்டபோது எந்த மன்னருடைய வாழ்த்துப் பாடப் பட்டது? எந்த மன்னர் ஸ்ரீ முகம் படிக்கப் பட்டது? எந்த மன்னருக்கு விஸ்வாசப்பிரமாணம் செய்யப்பட்டது?

"ஒரு சரித்திரச் சந்தேகி"

குடி அரசு

26—6—48 சனிக்கிழமை.

# திருச்சியில் நிர்வாகக் கமிட்டி.

★

சென்ற வாரத்தில் விடுதலைக்கு ஜாமீன் கேட்டிருக்கும் பார்ப்பனீய ஆதிக்க சர்க்காரின் சேதியையும், கேட்டிருப்பதிலிருந்து நம் கழக வேலைகள் எதுவுமே நடப்பதை இப்போதையச் சர்க்கார் விரும்ப வில்லையென்பதைத்தான் தெரிந்து கொள்ள முடிகிறது என்பதையும் குறிப்பிட்டு, இந்த நெருக்கடியான நிலைமையில் தலைவர் பெரியாரவர்களும் நிர்வாகக் கமிட்டியும் 24—6—48ல் திருச்சியில் கூடிச் செய்யும் முடிவுகள் நாம் இனி என்ன செய்யவேண்டும்? என்பதற்கு வழி காட்டும் எனவும் குறிப்பிட்டிருந்தோம்.

பெரியாரவர்களின் அறிவிப்பின்படி 24—6—48ம் நாள் திருச்சியில் தலைவர் வேதாசலமவர்கள் வீட்டில் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி கூடிச் செய்த முடிவுகளை நாம் வேறொரு பக்கத்தில் தந்திருக்கிறோம்.

இப்போது நம் முன் நிற்கும் பிரச்னையைக் கொஞ்சம்கூடக் குறைக்காமல், கூட்டாமல் நம்மில் ஒவ்வொருவரும் சரியாக மதிப்பிட வேண்டும். இன்று நம்மீது அடக்குமுறைகளை வீசும் சென்னை சர்க்கார் ஒரு சூத்திரப் பாவை. சூத்திரதாரிகளான பார்ப்பனர்களும, ஒரே இந்தியா என்கிற ஏகாதிபத்திய உணர்ச்சியுடைய வடநாட்டுத் தலைவர்களும் எப்படி ஆட்டிவைக்கிறார்களோ, அப்படி ஆடுவதற்குத்தான் இவர்களால் முடியும். மேலும் இப்பொம்மைகளுக்குத் "திராவிடர்" என்கிற போர்வை வேறு போர்த்தப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் இப்பொம்மைகளை ஆட்டும் சூத்திரதாரிகள் கொஞ்சமாவது ஈவு இரக்கமுடையவர்கள் என்றோ, அறிவு, நியாயம், ஒழுங்கு முதலிய உயரிய குணங்களில் நம்பிக்கை கொண்டவர்கள் என்றோ எண்ணவும் முடியாத நிலையிலுள்ளவர்கள். எத்தனையோ கொலைகளையும் கொள்ளைகளையும் மேற்கொண்ட பணக்காரன், நாலு பார்ப்பானுக்குச் சோற்றைப் போட்டு விட்டு [பார்ப்பானுக்குக் கூலி கொடுத்துப் பார்ப்பானைச் சமைக்கச் செய்துதான்] ஒரு கும்பாபிஷேகத்தையும் செய்து விட்டால், ஒரு "தருமப் பிரபு"வாகவும் பெரிய "லட்சாதிபதியாகவும்எப்படிமற்ற ஜனங்களால் மதிக்கப்படப் பார்ப்பனர்களால் செய்யப்பட்டு விடப் படுகிறானோ அந்தப்படியே, ஜனநாயகம், சரி சமத்துவம், சமசந்தர்ப்பம் முதலிய அடிப்படையில் இல்லாத—அடிப்படையை வெறுக்கும் இந்தப் பார்ப்பனீய ஆதிக்க சர்க்காரும், எத்தனை படுமோசமான நிர்வாகத்தையுடையதாயிருந்தாலும், ஒரு மதச்சார்பிலேயே அதற்கு ஆதரவாக எத்தனை இழி காரியங்களைச்செய்தாலும், பார்ப்பனர்கள்தான் மனிதர்கள் மற்றவர்கள் மனிதரே அல்ல என்று நடத்திக் காட்டி வந்தாலும், பார்ப்பனக் குரல்களான செய்தி நிலையங்களும் பார்ப்பனக் குரல்களான உள்நாட்டு, வெளிநாட்டு விளம்பர நிலையங்களும் அந்த நடத்தைகளை மறைத்து, மற்ற ஜனங்களை ஒரு பொய் நம்பிக்கை கொள்ளும்படி செய்துவிடுகின்றது.

சென்னையில் போர்வாள் நாடகத்திற்குத் தடை. எப்பொழுது? மயிலாப்பூர் திருவல்லிக்கேணி வட்டாரம் மந்திரி சபையைத் தாண்டிவிட்ட பொழுது அல்லவா?

பெரியாரவர்களின் பேச்சுக்கு 144. எப்பொழுது? அக்கிரகார மிராசுதார்கள் ஆரியப்போலீஸ் உத்தியோகஸ்தர்களைத் தூண்டிய பொழுது அல்லவா?

இல்லாத கருஞ்சட்டைப் படைக்குத் தடை. எப்பொழுது? வைத்தியநாதய்யர்களும், வரதாச்சாரிகளும், பாஷ்யங்களும், பட்டாபிராமன்களும் அமைச்சர் குழுவுக்கு அறிவைத் தடுத்து அச்சத்தைப் புகுத்தியபோது; "இந்து" வகையராக்கள் இதோபதேசம் செய்தபோது அல்லவா?

இராவண காவியத்திற்குத் தடை! விடுதலைக்கு ஜாமீன்! எப்பொழுது? ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட, ராஜகெம்பீர ஜவஹர்லால் பூதேவர் அவர்கள் திராவிட நாட்டுக்கு (உதகை) விஜயம் செய்த பிறகு. அதாவது அந்த விஜயத்தின் போது இங்குள்ள பூதேவர்கள், ராஜ பூதேவரின் காதைக் கடிக்க, அதனால் வெளிப்படையாகக் கோவையில் கோபித்து ராஜ பூதேவர் ராட்சஸத் திராவிடர் மீது சுடுமொழியை வழங்க, அதன் பின் காவியத்திற்குத் தடை! விடுதலைக்கு ஜாமீன்! என்று சொல்லும்படி நடந்திருக்கிறது. ஏனென்றால் மிக மிகச் சிறிய கூட்டத்தாரால் படிக்கப்பட்டு வந்த இராவண காவியம்,—எந்தவிதமான அரசியல் துவேஷத்தையோ வேறு வகையான வெறுப்பையோ விளைவித்து விட்டது அல்லது விளைவித்து விடும் என்று கருதவும் முடியாத இராவண காவியம்—கிட்டதட்ட ஒன்றரை வருஷங்களுக்குப் பிறகு அப்போதே ஆட்சியில் இருந்து வருகிற சர்க்காரால் இப்போது பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறதென்றால் அதற்கு என்ன அர்த்தம்? இருபத்தைந்து வருடங்களாகச் செய்யப்பட்டு வரும் சுயமரியாதைப் பிரசாரம், அரசியல் நிர்வாகத்தில் திராவிடர்கள் விகிதாச்சார உரிமை பெற வேண்டுமென்கிற நீதிக்கட்சிப் பிரசாரம், திராவிட நாட்டில் வடநாட்டார் ஆதிக்கமில்லாது திராவிடநாடு திராவிடருக்கே ஆகவேண்டுமென்னும் திராவிடர் கழகப் பிரசாரம் ஆகியவைகளுக்கு இத்தனை வருஷங்களுக்குப் பிறகு ஜாமீன் கேட்கும்படியான நிலையுண்டாயிருப்பதற்கு என்ன அர்த்தம்?

ஆகவே இப்போதைய ஆட்டிவைக்கும் ஆட்சிப் பீடம், முழுக்க முழுக்கப்பார்ப்பன ஆதிக்கம் நிறைந்து வழிவதாகும். இவ்வாட்சியில் மனிதவுரிமை, மனிதன் மனிதனாக மதிக்கப்படவேண்டும் என்கிற உரிமைக்கிளர்ச்சி எப்படியும் ஒடுக்கப்படவே முயற்சி செய்யப்படும். அதுவும் ஒடுக்கப்படும் செயல் எவ்வளவு கொடூரமாக இருக்க முடியுமோ அவ்வளவு கொடூரமாக இருந்தால் யாரும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இது நம்மை ஒடுக்கி அழித்து விட எண்ணி அதற்கான காரியங்களைச் செய்யத் தொடங்கியிருக்கும் பார்ப்பனீய ஆதிக்கக் காங்கரஸின் தன்மை, பலம்.

இந்த அடக்கு முறைகளுக்கு ஆளாகிவரும் நம்முடைய நிலைமையையும் நாம் மனதில் எண்ணிப் பார்க்கவேண்டும். நம்மில் பெரும்பாலோர் கல்வியறிவு இல்லாதவர்கள். பொருள் வகையில் பெரும்பாலோர் ஏழைகள். பலாத்காரத்தில் ஒரு சிறிதும் நம்பிக்கையில்லாதவர்கள். மேலும் மூடநம்பிக்கை, குருட்டுப்புத்தி எங்கெங்கு ஆட்சி செய்கிறதோ அது எல்லாவற்றையும் கண்டிப்பவர்கள். அந்தக் கண்டனத்தால் யார் யாருக்குத் தீமையோ அவர்கள் எல்லோராலும் நாம் வெறுக்கப்படக்கூடிய நிலைமையில், நம்மோடு அவர்கள் ஒத்துழைக்க முடியாத நிலைமையில் இருந்து வருகிறோம். இந்த நிலையிலும் எண்ணற்ற ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அமைதியான போராட்டத்திற்குத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நிர்வாகக் கமிட்டி முடிவுகளை இனி எடுத்துக் கொள்வோம். முதல் முடிவு ஜாமீன் கேட்ட சர்க்காரின் அநீதியை வன்மையாகக் கண்டிப்பதாகும். 2 வது முடிவால் நிர்வாகக் கமிட்டி நிலைமையை நன்றாகப் புரிந்து கொண்டு, அதை ஒளிவு மறைவில்லாமல் வெளிப்படையாகச் சொல்லி விட்டது. 3 வது முடிவு நாம் இனி என்ன செய்யவேண்டும், எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதற்கு, இப்போதைய நிலைமையில் நாம் நடந்து கொள்ளவேண்டிய முறை எதுவோ, அந்த முறையைச் சரியாகக் காண்பித்திருக்கிறது. 4-வது முடிவால், 1-7-48-ம் நாளை திராவிடநாட்டுப்பிரிவினை நாளாக நல்ல முறையில் அமைதியாகக் கொண்டாடிப், பிரிவினையை வற்புறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றி, சென்ற ஆண்டு செய்தது போல் இவ்வாண்டும் செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்துகிறது.

இவற்றுள், மூன்றாவது தீர்மானம்தான் இந்த நிர்வாகக் கமிட்டி செய்த முடிவுகளுள் ஒரு முக்கியத்துவம் பெற்றதெனலாம். சர்க்காரின் அடக்குமுறை மேலும் நீளுமானால் அவைகளைச் சமாளிக்க, நாம் என்ன செய்வது என்பதற்கான திட்டங்களையும் வழி முறைகளையும் வகுத்துக் கொடுக்கவும், உடனடியான நடவடிக்கைகளை எடுக்கவும் தலைவர் பெரியார் அவர்களுக்குச் சகல அதிகாரங்களையும் நிர்வாகக் கமிட்டி கொடுத்திருக்கிறது. இந்த முடிவு, உணர்ச்சி மிக்க இளம் உள்ளங்களின் உற்சாகமான தூண்டுதலால் ஏற்பட்டது என்பதை நாம் மறைக்கவில்லை. மேலும் இந்த அளவு போதாது, இன்னும் தெளிவும் விரைவும் காட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதும் இளம் உள்ளங்களின் குமுறல் என்பதையும் நாம் மறைக்கவில்லை.

ஆனால் இப்போதைய நிலைமையில் அடக்குமுறையைக் கண்டு அஞ்சமாட்டோம்! திராவிட நாட்டுப்பிரிவினையே எமது குறிக்கோள்! பார்ப்பனீய விடுதலையே திராவிடனின் உண்மையான விடுதலை! இதற்கு, இந்தக்கோரிக்கைகள் நிறைவேறுவதற்குத்திராவிடர்கள் பலியாக வேண்டுமா? அது தான் உங்கள் விருப்பம் என்றால் அதற்கும் நாங்கள் தயார்! என்பதை இப்போதைய சர்க்காருக்கு இந்த முடிவுகளால் நாம் தெரிவித்திருக்கிறோம் என்பதையும் நாம் மறைக்க வில்லை.

இந்த முடிவைக் கேட்டுச் சர்க்காருக்கு நல்ல புத்தி வந்துவிடுமென்றோ, அதனால் ஜாமீன் தொகை திருப்பப்பட்டு விடும், கருஞ்சட்டைப்படையின் தடை அர்த்தமற்றது என்று அறிவிக்கப் பட்டு விடுமென்றோ நாம் சிறிதும் எதிர்பார்க்கவேயில்லை. ஆனால் அடக்குமுறை வெவ்வேறு வடிவத்தில் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டேதான் போகும் என்று கூட நாம் எதிர்பார்க்கிறோம்.

ஆதலால் திராவிட மக்களுக்கு அவசர அபாய அறிவிப்பு இது தான். எந்த நேரத்திலும் நாம் ஒடுக்கப்படலாம்! நம்முடைய நியாயமான முறைகளை அடிப்படையாகக் கொண்ட பிரச்சாரம் சட்ட விரோதம் என்று ஆக்கப்பட்டுவிடலாம்! இந்த ஆணவப் போக்கை எதிர்த்து நாம் உடனடியான நடவடிக்கை எடுத்து ஆகவேண்டும் என்கிற நிலைமையைச் சர்க்கார் இன்றோ நாளையோ உண்டுபண்ணிவிடலாம்! எதற்கும் தயாராயிருங்கள்! எப்பொழுதும் தயாராயிருங்கள். இதுதான் இன்றையப் பார்ப்பனீய ஆதிக்க சர்க்கார் நம்மை நோக்கிக் கூறும் சவால்! இதை நாம் திராவிட இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு அறிவிக்கிறோம்.

மேலும் நாம் அழிய வேண்டும் என்கிற நிலையேற்படுமானால், நாமே அழிந்து போவது நல்லதா? அல்லது பிறரால் அழிக்கப்படுவது நல்லதா? என்பதையும் ஒவ்வொரு திராவிடர்களும் சிந்தித்து முடிவு கட்டவேண்டிய காலம் இது என்பதை நினைப்பூட்டி, அங்கங்கே உள்ள இயக்கத் தொண்டர்கள் ஓயாமல் ஒழியாமல் சுற்றி, நம் மக்களுக்கு நிலைமையை விளக்கி, அவர்கள் தரும் அபிப்பிராயங்களை ஒன்று திரட்டி, நிலைமைக்கு ஏற்றபரிகாரத்தைக் காண, தலைவர் பெரியார் அவர்கள் தக்க முடிவை விரைந்து செய்ய, தீவிரமாக உழைக்க வேண்டுமென்றும் இது மிக மிக அவசரமென்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

## கோவை நகர திராவிடர்கழக புதுகட்டிட திறப்புவிழா.

★

4—7—48 ஞாயிற்றுகிழமை மாலை 5-மணிக்கு தெப்பக்குளம் வீதி சாரதா பெண்பாடசாலையையும் கழகக்கட்டிடத்தையும்அடுத்த பெரியார் மைதானத்தில்.

மத்திய திராவிடர்கழக தலைவர் தோழர்:—தி. பொ. வேதாசலம். B. A. B. L. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திறப்பாளர்:—பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள்.

கொடி உயர்த்துபவர்:-தோழியர் T. S. குஞ்சிதம் அம்மையார் B. A. L. T அவர்கள்.

சொற்பொழிவாளர்:—தோழர். சா. குருசாமி B. A. அவர்கள். தோழர்கள் அனைவரும் வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

கோவை நகர திராவிடர் கழகத்தார்

N. B. கழகத்தோழர்கள் கருஞ்சட்டையுடன் வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


---

## குடந்தையில் குடி அரசு ஏஜண்ட்.

29—5—48 முதல் குடந்தைத் தோழர் ப. குஞ்சிதபாதம் நமது ஏஜண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ராஜா ஸ்போர்ட்ஸில் குடி அரசு கிடைக்கும்.

# ★ உயரிய புதையல். ★

[★]



நமதுதமிழ் நாட்டில்பிறக்கும் புண்ணியம் எல்லோருக்கும் கிடைக்காதென்று நமது புராணீகர்கள் கூறுவார்கள். நாம் சொல்லுகிறோம் இந்தத் துர்ப்பாக்கிய மிகுந்த தமிழ்நாட்டில் பிறப்பதை விடுத்து, மற்ற நாடுகளில் ஒரு மிருகமாய்ப் பிறந்தால் கூட அதிலே ஒரு பலன் உண்டு என்று. ஏன்?

நமது நாட்டில் உள்ள ஒரு ஓவியனுக்கு இங்கு வேலையும், புகழும் கிடைக்காது; ஒரு கலைஞனுக்கும் அப்படியேதான், ஒரு கவிஞனுக்கும் அப்படியேதான். கலாரசிகன், ஒரு அரசியல்வாதி, ஒரு விஞ்ஞானி இம்மாதிரி எந்த வகையில் உயர்ந்தவனாய் இருந்தாலும், நம் நாட்டு மக்கள் அவனைப்போற்றி வளர்த்து, அந்த அறிஞன் தரும் நற்கருத்துக்களைக் கைக்கொண்டு பயனடைந்து கொள்ளும் தன்மை வரவேவராதென்றுதான் கூறியாக வேண்டியிருக்கிறது.

இன்றைய அரசியலில் முதன்மை ஸ்தானம் ஒரு வடநாட்டானிடம்தான் இருக்க முடிகிறது. ஒரு கப்பல் தொழிலுக்கு வடநாடு. ஒரு வைரவியாபாரத்திற்கு வடநாடு. ஒரு இரும்புக்கு வடநாடு. ஒரு சிமிண்ட்க்கு வடநாடு. ஒரு ஜவுளிகூட வடநாட்டானிடம்தான் இருக்கிறது. ஒரு மோட்டார் தொழில் வடநாட்டில்தான் இருக்கிறது. இம்மாதிரித் தொழில் முறைகளை யெல்லாம் வடநாட்டானிடம் அடகு வைத்த தமிழன், தன் புத்தியைக்கூட இங்குள்ள பார்ப்பானிடம் அடகு வைத்துவிட்டு திரிகிறான். ஏன் இவ்வாறு கூறுகிறோம் என்றால், நம் நாட்டைத் தனியே பிரித்தால் பாரதமாதாவுக்கு உயிர் போய்விடுமென்று கவலைப்படும் காங்கரஸ் தோழர்களே! அறிவாளிகளே! ஆளவந்தோரே! வடநாட்டானிடம் செல்வாக்குள்ள சீமான்களே! சமதர்மம் பேசும் சகோதரரே! இதோ! கோவையில் இம்மாதம் 15ந் தேதி முதல் நடந்துவரும் நமது மோட்டார் மன்னரின் விஞ்ஞானக் கண்காட்சியைப் போய்ப் பாருங்கள். உங்கள் மனம் கொதிக்கிறதா இல்லையா என்று பார்ப்போம்! வாழ்க்கைப் பாதையில் முக்கால் பாகம் கடந்துவிட்ட நமது நாயுடு அவர்களின் முகத்தை உற்றுக் கவனித்துப் பாருங்கள்! அப்பொழுது தெரியும்; அந்த முகத்திலே ஒரு ஏமாற்றத்தையும், ஏக்கத்தையும், கவலையையும் காண்பீர்! நமது நாட்டில் ஒரு அமெரிக்கனையும், ஜெர்மானியனையும் மிஞ்சும் விஞ்ஞானி ஒருவன், தன் நேரத்தையும், காலத்தையும் வீணாக்கிக் கண்டு பிடித்த அரிய சாதனங்கள் நம் நாட்டுக்கே பயனடையச் செய்ய முடியாமல் போனால், அந்த உயரிய சாதனங்களைக் கண்டுபிடித்த உள்ளம் வெதும்பி வெடிக்காமல் போகுமா? அந்த விஞ்ஞானத்துக்கு மக்களும், அரசியலாரும் ஆதரவு கொடுத்தால் நம்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்குமா? நாம் பிறநாட்டை எதிர் பார்த்துக் கொண்டு இருப்போமா? அய்யோ! தாழ்ந்த தமிழகமே! இந்த உயரிய புதையலை ஆழப்புதைத்து அறியாதார் என்னும் கற்களைக் கொண்டு மூடிவைத்திருக்கிறாயே, உன்கதி இப்படியேதான் போகுமா?

[6ம் பக்கத் தொடர்ச்சி]

றது? மேலும் இன இழிவு நீங்க வேண்டும் என்ற காரணத்திற்காகவல்லவோ இக்கழகம் கருஞ்சட்டை அணிந்து வருகிறது. இஃது கனம் மந்திரிமார்களுக்குத்தெரியாத சேதியல்லவே! அப்படியிருந்தும் சமீபத்திலே சட்டசபையிலே ஒரு கேள்விக்குப் பதில் சொன்னபொழுது, திராவிடர் கழகத்தின்கொள்கைகள் தமக்குத் தெரியாதென்றும், அக்கழகத்தின் தலைவரையே கேட்க வேண்டும் என்றும் சொல்லியிருப்பதின் மர்மம் என்ன? அமைச்சர்களுக்கு இது அழகா. இஃது அவர்தம் பேச்சுக்கும், செய்கைக்கும் முன்னுக்குப் பின் முரண்பாடாகவல்லவோ உள்ளது.

இதிலிருந்து திராவிடப் பொது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டியதென்ன வென்றால், சர்க்கார் தங்கள் சொந்த அபிப்பிராயத்தின் மீது இந்த நடவடிக்கைகளை (?) எடுக்கவில்லை. இந்த நாட்டிலே அண்டவந்து அரசனாக ஆகப் பார்க்கும் ஆரியப் புல்லுருவிகளின் போதனையினால்தான், இந்தவிதமான மோசமான செய்கையிலே சர்க்கார் இறங்கியுள்ளது என்பது தான்.

ஆனால் திராவிடர் கழகம் பல சோதனைகளுக்கு இலக்கு ஆனபின், ஓமாந்தூரார் ஏமாந்தாரே! சுப்பராயன் சோர்வடைந்தாரே!! என்று தான் வருந்துகிறோம். ஏனெனில், இன்றுவரையில் அவர்கள் எதிர்பார்த்தபடி (!) வகுப்பு வாதத்திற்கு வித்துவிளைக்கும் எந்தவிதமான வினைப் பொருள்களும் காணப்படவில்லை.

எப்படிக் காணமுடியும்? அது தான் (திராவிடர் கழகம்) வகுப்பு வாதத்திற்கே பரம வைரியாயிற்றே!

நாங்கள் வைதீகத்தைக் கண்டிக்கின்றோம்; வர்ணாஸ்சிரமத்தைக் கண்டிக்கின்றோம்; வேதியரைக் கண்டிக்கின்றோம் என்றால் வழியேதான் கண்டிக்கின்றோம். வரலாற்றின் வாயிற்படியிலே, நின்று கொண்டு தான் கண்டிக்கிறோம். தகுந்த காரணங்களைக் காட்டித்தான் கண்டிக்கிறோம். இந்த ஒரே ஒரு காரணத்தினால் தான் சீறுகிறது அந்த சுண்டக்காய்ப் பார்ப்பனீயம்.

அண்டவந்த ஆரியம் அரசர்களை அழித்துவிட்டு, உண்மை

யான சரித்திரத்திற்கும் தங்களது சதிச் செயல்களுக்கும் இருட்டடிப்புப் போட்டுவிட்டு, பழக்க வழக்கங்கள், மொழி, கலை, நாகரீகம், பண்பாடு, தெய்வத்தைப் பற்றிய கருத்து முதலியவற்றை வீழ்த்தி அதற்குப் பதிலாக, தங்களுடைய உளுத்துப்போன பழக்க வழக்கங்களை இங்கே இவற்றுடன் ஒன்றச் செய்து, உயிரிழந்த சமஸ்கிருதத்தைப்புகுத்தி, தங்களுடைய ஆக்கவேலைக்கு ஊக்கம் தரும் வகையிலே வித்து விளைத்துக் கொண்டால்,

இந்நாட்டுப் பழங்குடி மக்களின் வழிவந்த ஏந்தல்களுக்கு (திராவிடர்களுக்கு) மனம் பொறுக்குமா? எனவே தான், நாம் பார்ப்பனீயத்தை வேரறுக்க முற்பட்டுள்ளோம். அதற்காகப் புரட்சி செய்கிறோம். இந்தக் காரணத்தினால் அந்தக் கூட்டம் நம்மைக் கண்டு ஆத்திரப்படுகிறது. ஆனால், அதன் ஆத்திரம் நம்மை அசைக்க முடியாது என்பதை அதுவே நன்கு உணரும். அதனால் தான் அது அரசியலாரைக் கிளப்பி விட்டுவிட்டு, திரைமறைவில் இருந்துகொண்டு நம்மை நகைக்கிறது அந்தக் கூட்டம்.

விடுதலைக்கு ஜாமீன், காவியத்திற்குத் தடை என்கிற அரசியலாரின் அறிவு மழுங்கியதைக் கண்டு, எந்தத் தன்மானமுள்ள—சுயமரியாதையுள்ள திராவிடனும் சிரிக்காமலிருக்க மாட்டான். இனியாவது தான்செய்த தவறைத்தானே உணருவர் என்று நம்புகிறோம்.

ஆனால் ஒன்றை மட்டும் எந்த நாளிலும் மறக்கவே கூடாது. வெள்ளையன் காலத்திலும் உபயோகப்படுத்தப்படாத இவ்வளவு அடக்குமுறை இந்த நாளில் நாட்டின் நாலா பக்கங்களிலும் நடமாடும் மர்மம், பார்ப்பனீயத்தின் பகட்டுகள்தாம் என்பதை மட்டும் ஒருபோதும் மறக்கக் கூடாது.

ஆனால் நாங்கள் முடிவாகக்கூற விரும்புவது ஒன்று. அஃது என்னவென்றால், உங்களடக்குமுறையால் எங்களியக்கம் எடுக்க எடுக்க அதிகப்படுவதைப்போல அடக்குமுறை வீசவீச பிரமாண்டமாக வளர்ந்து கொண்டேதான் போகும் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறோம்.

ஏனெனில், ஈரோட்டு அண்ணலின் அடிச்சுவட்டைப் பின் பற்றும் கோடிக்கணக்கான மக்களின் நெஞ்சுரம், புரட்சி, அத்தகையன என்ற காரணந்தான்.

உங்களின் மருட்சி, எங்கள் புரட்சியை ஒருபோதும் ஒன்றும் செய்துவிட முடியாது.

"மருள் நீக்கி"

# கனவைக்கண்ட கர்த்தரின் தூதர்!

★

நேபுகாத்நேச்சார் என்ற அரசன் ஆட்சிபுரியும் இரண்டாம் வருடத்திலே அவன் கனவுகளைக் கண்டான். கண்ட கனவுகளை ஈண்டு குறிப்பிட்டால் கட்டுரை நீண்டுவிடும். கண்ட கனவினால் அவனது ஆவி கலங்கித் தூக்கம் கலைந்தது.

அப்பொழுது அரசன், தன் கனவையும் அதன் கருத்தையும் தெரிவிக்கும் பொருட்டு, அநேக சாஸ்திரிகளையும், ஜோதிடக்காரரையும், சூனியக்காரரையும் அழைக்கச் செய்து தனது கட்டளையைத் தெரிவித்தான். அப்படி அவர்கள் தான்கண்ட கனவையும், அதன் கருத்தையும் கூறாவிடில் அவர்களைக் கொன்றுவிடுவதாகவும் கட்டளையிட்டான். இவன் கண்ட கனவையும், அதன் கருத்தையும் வந்தவராலும் கூறமுடியவில்லை. உடனே அவர்களைக் கொன்று இன்னும் அவர்களைப் போலுள்ள ஆட்களையும் கொன்று குவித்தானாம். இப்படிக் கொன்று கொண்டு வரும் தருணம் தானியேலையும் கொல்லச் சென்றனர் ஆட்கள். அதற்குத் தானியேல் அரசனின் கட்டளைப்படி அவர் கனவை இன்னதென்று கூறுவேன் என்று சொல்லி, கொல்வதற்கு வந்த ஆட்களுடன் அரசசபைக்குச் சென்று ஆங்கு அவன் கண்ட கனவை இன்னதென்று சொல்லி, அதற்கு அர்த்தமும் பிரித்தான் என்று பைபில் பகருகிறது.

எந்த ஒரு அரசனாவது தான் கண்ட கனவை அப்படியே சொல்லாதவனைக் கொன்று விடுங்கள் என்று கட்டளையிடுவானா? அப்படியே இருந்தாலும் இம்மாதிரிக் கட்டளையிட்ட ஒரு அரசனை அறிவுடையவன் என்று எந்த ஆராய்ச்சியாளனாவது துணிதியிட்டுக் கூறமுடியுமா? அப்படியே அவன் கட்டளைப்படி கொன்று குவித்த கூட்டம் தானியேலைக் கொல்ல எத்தனித்த போது, அவன் அரசன் கனவைக் கூறுவதாகச் சொல்லி அதன்படியே கூறிவிட்டான் என்றால் இது முழுப் பொய் யென்று கூறாமல் உண்மை என்றா உரைப்பது. அப்படி ஒரு கர்த்தா, ஒரு சர்வ ஈஸ்வரர், ஒரு பரம பிதா தானியேலுக்குக் கனவைச் சொன்னவர், ஏன் இப்பொழுது உலகத்தில் நடந்து வரும் தீங்கை, மூடநம்பிக்கையை, முட்டாள் தனத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்!?

"அப்பொது கடவுள் மேல் நம்பிக்கை யுற்றிருந்தது போல் இப்பொழுது இல்லை ஆகவே இப்பொழுது நடக்கிறது" என்று பலபேர் எடுத்தியம்ப முன்வருவர். ஆனால் அப்பேர்ப்பட்ட கடவுள் சீடர்கள் ஒன்றிருவர் இருப்பதற்காவது அக் கடவுள் நலன் செய்யக் கூடாதா? அப்படியே நலம் பல நவின்று கொடுக்காவிடினும் உலகத்தில் நடக்கப் போகும் சங்கதிகளை, உதாரணமாகக் காந்தியாரைக் கொன்றதைப் போன்ற ஒரு அதிசயச் சங்கதி உலகத்தில் நடப்பதற்கு முன், அதைக் கிருஸ்துவ மத போதகரும், கர்த்தாவின் அடிவருடியுமாகிய ரோமா புரியிலிருந்து கொண்டு ஒய்யார வாழ்வு வாழும் போப்பாண்டவருக்காவது அந்தக் கர்த்தர் அறிவிக்கக் கூடாதா? எப்படித் தெரிவிக்க முடியும்? நாட்டு மக்கள் நல்ல முறையிலே வாழ வழி வகுக்க ஒன்றிரண்டு அதிகாரங்கள் பைபிலிலிருக்கின்றன. அவற்றை வைத்துக்கொண்டு தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் மக்களைக்கொண்டு 'வரக் கட்டுக் கதைகளைக் கட்டி அது "தேவனின் வாக்கு" என்றும் அவனைத் துதித்தவர்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் எவ்வளவு இருக்கின்றன என்று எண்ணிக் கையற்ற அளவில், ஏட்டிலே எழுதி அதை நாட்டு மக்களை நம்பச் செய்து, அதன் வாயிலாகக்கோடிக் கணக்கான பணங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு வாழ்வதைத் தடுக்காது, இருப்பது திராவிடரின் பண்பல்ல. நல்லகலை, பண்பு, நாகரீகத்தோடு வாழ்ந்த

நாம் ஹிந்து மதத்தின் பேரால் ஆரியர் செய்த அட்டகாசம் தாங்காது ஆனந்தமாய் வாழலாம் என்ற எண்ணத்தோடு கிருஸ்தவ மதத்திற்குச் சென்றால், அங்கு ரோமாபுரியின் போப்பாண்டவர் என்று சொல்லுபவரின் கீழுள்ள பாதிரிமார்களிடத்திலும், வியாபாரத்திலும் அரசியலிலும் வடநாட்டவரிடத்திலும் பணத்தைக் கொடுத்து விட்டுப் பட்டினியாய்ப், பஞ்சைகளாய் வாழ்வது முறையல்ல. பிறனொருவன் சுரண்டலை, அவன் எந்த வழியிலே கடைபிடித்தாலும் அதில் ஏமாறாது, இனியாகிலும் நல்லமுறையில் நாம் வாழ, நம் நாட்டைத் தனி நாடாக்க, ஆசாரங்களை விட்டொழித்து மானத்தைக்காக்க ஆராய்ச்சியோடு அன்றிலிருந்து இன்றுவரை இருந்த, இருக்கின்ற நூல்களைப் படித்து, நல்லதைவைத்து, பொல்லாததைப் புறக்கணித்து உண்மையாய், அன்பாய், இரக்கமாய், பொது நலமாய் வாழ ஒன்றுபட்டு வாருங்கள்.

சிந்தனையாளர்கள் பெருகிய இந்தக்காலத்தில் நாம் சீர்கேடான நிலையிலா இருப்பது?

வாருங்கள் வறுமையை ஒழிக்க, நாடுவளம் பெறுவது உறுதி. ஒற்றுமை ஓங்கட்டும் உங்கள் உள்ளத்தில்.

"ஆட்கோண்டான்."

---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டன. அவள் ஒரு விதவை. இயற்கை அழகைத் தவிர செயற்கையழகே காணமுடியாது. வெண்தாமரை முகமும்,பவளச்செவ்விதழும்,சுருண்ட மயிரும், பிறைநுதலும், இயற்கை அவளுக்களித்த அணிகள். வெண்கற்கள் பதித்த கம்மலை தவிர வேறு செயற்கை முறையே அவளிடம் கிடையாது. பத்துச்சாந்தாவிற்கு ஈடுகொடுக்கும் அவள் இயற்கையழகில், சேகரன் மயங்கியதில் வியப்பில்லை. அவன் அன்பெல்லாம் பாக்கியத்திடம் மாறிவிட்டது.

உரிமையற்ற உலகில், சாந்தாவிற்கு உரியவன் கூட மிஞ்சவில்லை. அவனுக்குற்ற உரிமையைப்போல், அவள் வேறு ஒருவனைநாட உரிமையில்லை. அவனைக் கட்டுப்படுத்த அவளுக்குரிமையில்லை. அவளை அடக்க அவனுக்குரிமையுண்டு. பாக்கியத்திடம் சண்டைபோட சாந்தா விரும்பவில்லை. கொஞ்சம் நாகரீகம் தெரிந்தவள். சாந்தாகூட பாக்கியத்தின் அழகைக்கண்டு அயர்ந்ததுண்டு. அப்படியிருக்க அவளிடம் சண்டைப் போட்டுச் சேகரனை அடைவது முடியாது என்பதை உணர்ந்தாள். அதற்காகவே ஆண்டவனை அண்டினாள். அழகு கிடைத்து, பாக்கியத்திடம் போட்டியிட்டுக் கணவனை அடைவதற்கு கண்ணீர்பெருக ஆண்டவனை வேண்டிக்கொண்டிருந்தாள். ஆண்டவரும் இரங்கினாரோ என்னவோ ஊர்வலத்திற்கு புறப்பட்டார்.

* *

வாழ்க்கையை வளம் செய்ய வழி தேடிய வேலன், பலரகப்பக்த குழாங்களிடையே சுற்றித் திரிந்தான். பக்தியில் மூழ்கினாலும், எதையும் பறிகொடுக்கக் கூடாது என்ற எச்சரிக்கையில் தான் இருந்தனர் பக்தர்கள். அவர்களிடம் தன் கைத்திறன் பலிக்காது எனக் கண்ட வேலன், தன்னை மறந்து வேண்டுதலையில் மூழ்கிய சாந்தாவிடம் வந்தான். அவள் காதிலே தொங்கிய வைரத்தோடு அவன் மனதை வசிகரித்துக் கொண்டது. "அப்பா ஒரு அய்நூறாகிலும் தேரும். கவலையில்லை. எச்சரிக்கையற்ற இடத்தில், கவலைக் கொள்ளும் அவசியம் ஏற்படவில்லை. ஆக்கவேலைக்கு முடிவு கட்டி விட்டான்.

ஊர்வலமாக ஆண்டவன் புறப்பட்டார்,பக்தர்களுக்குத்தரிசனம்கொடுக்க. நெருக்கடி அதிகரித்தது. ஆண் பெண் என்ற வேற்றுமையற்று இடித்துக் கொண்டு நின்றனர். பக்திக்கோஷங்கள் அலைகடல்போல் ஒலித்தது. அதிலே ஓலங்களும், அழுகையும், அலறலும் மறைந்திருந்தது. அதை கவனிப்பாரில்லை, பக்தி தலைக்கேறியிருந்தது.

வேலன் முனைந்து விட்டான் ஆக்க வேலையில். இட நெருக்கடிதான் அவன் ஆதரவு. ஆண்டவனை மனதிலே எண்ணிக்கொண்டு கத்திரியை எடுத்தான். தொங்கட்டு மட்டும் கத்திரித்து விடுவது என்ற எண்ணம். திடீரென்று சாந்தாவின் காதிலே வலியும், எரிச்சலும் ஏற்பட்டது. 'அய்யோ' என்றலறி விழுந்தாள். காதிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து, அவள் வெண்பட்டுப் புடவையே சிவந்துவிட்டது. இரத்தக் கரைபடிந்த கத்திரி ஒரு கையிலும், வைரத்தோடு தொங்கிய இரத்தக் கரைபடிந்த வெட்டுண்ட காதின் ஒரு பகுதி ஒரு கையிலுமாகக் காட்சியளித்தான் வேலன். அவன் சாந்தாவின் காதை வெட்ட வேண்டும் என்று முனையவில்லை. வைரத் தோட்டைத்தான் கத்திரிக்க எண்ணினான். இநட்டில் இடநெருக்கடியில் தொங்கட்டம் கத்திரிக்க முனைந்தபோது, பின் புறமிருந்து யாரோ அவனை இடித்துவிட்டார்கள். குறிதவறியது; காது வெட்டப்பட்டது. அலறல் ஒலிகேட்டு மக்கள் குழுமினர். வேலன் போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டான். சாந்தாவை மருத்துவச் சாலைக்கு வண்டியிலே எடுத்துச் சென்றனர். வேலனைப் போலீஸார் கெட்டித் தள்ளிச் சென்றனர்.

அழகு நாடி ஆண்டவனை வேண்டியவளுக்கு அழகுக்கு ஆதாரமான ஓர் உறுப்பு துண்டிக்கப்பட்டது. துணை நாடி ஆபத்பாந்தவனை வேண்டிய வேலனுக்கு போலீசிலே சிறைத் தண்டனை கொடுக்கப்பட்டது. இதுவும் ஆண்டவனின் திருவிளையாடலில் ஒன்று போலும்!!

உரிமையற்ற சாந்தா கணவனை வசிகரிக்க அழகு வேண்டி ஆண்டவனை நாடினாள் கோயிலிலே! வாழ வழியற்ற வேலன் வளம் வேண்டி ஆண்டவனை நாடினான்.

கோயிலிலே பரிதவிக்கும் குடும்பத்தைக் காப்பாற்ற வேலன் சாந்தாவின் காதறுத்துப் பதறச் செய்தான்! வேலனைப் போலீசாரிடம் ஒப்படைத்து, பரிதவித்த அவன் குடும்பத்தைப் பதறச்சாகச் செய்தாள் சாந்தா!! குற்றவாளி யார்?

## தோற்றம்.

சுவாமி மலைக்கு அடுத்த புளியஞ்சேரி பாரதிதாசன் திராவிடர் கழக நிர்வாகி க. கோ ரெங்கசாமி வாழ்க்கைத் துணைவி காமாட்சியம்மாளுக்கு 9-6-48ல் பிறந்த ஆண் மகவுக்கு 19-6-48ல் குணசீலன் என்ற பெயரிடப்பட்டது. பார்ப்பனச் சடங்கின்றி நடந்த இதன் நினைவாக குடிஅரசுக்கு நன்கொடை ரூபாய் ஒன்று அளிக்கப்பட்டது.

★

7—6—48 மாலை 6-மணிக்கு தி. ம. க. கட்டிடத்தில் நாகை பி. முத்துசாமி தலைமையில் தி. ம. கழக பொக்கிஷதார் பி. கந்தசாமி அவர்களின் ஆண் குழந்தைக்கு அன்புமணி என்று பெயரிடப்பட்டு குழந்தைக்கு மிட்டாய் வழங்கியபின் விடுதலை, குடிஅரசு, திராவிடன், திராவிட மருத்துவ கழகம் இவைகட்கு ரூபாய் ஒன்று வீதம் வழங்கப்பட்டுக் கூட்டம் கலைந்தது.


## திராவிடர் கழகம் என்றால் என்ன?

ஒரு சிறிய, உணர்தற்கரிய, படிப்பதற்குரிய, பண்பிற் பெரிய நூல். புலவர் குழந்தை புகழுரையுடன் கூடியது. எழுதியவர் எல். வீராசன். விலை அணா 2.

முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை. தனிப்பிரதி வேண்டுவோர் 0—2—9 தபால் பில்லை அனுப்புக.

—:விபரங்கட்கு:—
எல். வீராசன்
பாண்டியன் பதிப்பகம்,
கல்வார்ப்பட்டி, காசிபாளையம் P. O.
திண்டுக்கல் வழி.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் திருவாரூரையும் ஒவ்வொரு தட்டில் வைத்து நிறுக்க, திருவாரூரின் கனத்தில் பதினாறில் ஒருபங்குகூட மற்ற ஸ்தலங்கள் இல்லை.

திருவாரூர்ப் புராணக்காரர் கைலாயத்தை நீக்கி ஏனைய ஸ்தலங்களையே வைத்துக் கொண்டார். ஆயினும் மற்றவர்களைவிடக் குறைந்தவரல்ல. பூமியிலுள்ள நகரத்தையெல்லாம் எடுத்துக் கொள்கிறார்.

மற்ற இரண்டு புராணக்காரரும் தங்கள் தங்கள் தலம் கனமாகவேயிருந்ததென்கின்றனர். திருவாரூர்க்காரரோ எல்லா ஊரும் சேர்ந்து மாகாணிப் பங்குகூட இல்லையென்று ஒரேயடியாக அடித்துவிட்டார். இவைகளில் கவனிக்க வேண்டிய தென்னவென்றால், திருவண்ணாமலையை நிறுக்கும்போது எதிர்த்தட்டில் மதுரை திருவாரூர் எல்லாம் சேர்ந்துதானிருக்கின்றன; அப்படியே திருவாரூரை எடைபோடும்போது மதுரை திருவண்ணாமலை முதலிய தலங்கள் எதிர்த்தட்டில் இருந்திருக்கின்றன. எடையளவு எப்படித் தெரிந்ததென்பது காண வேண்டும். இதற்குப் புராணங்கள் எல்லாம் சத்தியம்; கடவுள்வாக்கு; அவற்றில் பொய்யே கிடையாதென்று கூறும் அறிஞர்கள் பதில் கூறுவார்களாக. 'தடுத்துப் பேசுவதற்கு ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்,' என்று கூறுவதைப்போல, கேட்பார் ஒருவருமில்லையென்று மனம்போனவாறு கதை கட்டிவிட்டனர் என்பது மட்டும் நிச்சயம். அல்லவா?

இனி ஏனைய தலங்களுக்கும் திருவண்ணாமலைக்கும் உள்ள வேறுபாடுகள் பின்வரும் செய்யுட்களால் கூறப்படுகின்றன.

"தில்லையைக்காணக் காசியிலிறக்கச்
சிறக்குமாரூர் தனிற்பிறக்க,
எல்லையில் பெருமை யருணையை
நினைக்க
எய்தலாம் முத்தியென்றுரைத்தீர்,
தில்லையில் நான்கு தலங்களுந்தம்மில்
ஒக்குமென்றுரைத்திடாதடி கேள்,
அல்லி சூழருணையதிகமென்றுரைத்த
தருளென அருள் செய்வானவனும்'
(திருநகரச்சருக்கம்-45)

(இ-ள்) சிதம்பரத்தைக்காணுதல், காசியில் இறத்தல், ஆரூரில் பிறத்தல் அண்ணாமலையை நினைத்தல் ஆகிய செயல்களினால் முத்தி கிடைக்குமென்றுரைத்தீர். இந்நான்கு தலத்தையும் சமமென்று கூறாது அருணையை உயர்த்திக் கூறினதென்னவென்று புராணங்கேட்பவர் வினாவ, புராணங் கூறுகின்றவர் சொல்லுகின்றார்.

"இறந்திடு தொழிலும் பிறந்திடுந்
தொழிலும்
எண்ணியபடியவை முடியா,
பறந்திடுமவைக்கும் சிலவிலங்கி
னுக்கும்
பாதப முதவுவோருயிர்க்கும்
நிறைந்த புன்னீசரந்தகர் தமக்கும்
நிருத்தமண்டபர் தொழநேரா
துறந்திகழ்பயனார் சிலர் சிலர்க்
கெளிதாம்
அல்லவர்க் கரியதாமதுவே''
(ஷைசருக்கம்-43)

(இ—ள்) இறப்பதும், பிறப்பதும் நினைத்த தலத்திற் செய்ய முடியாது. பறவை, மிருகம், தாவரம், நீசர், குருடர் ஆகியவர்கள் ஆலயத்துள்ளே வந்து தரிசனம் செய்ய முடியாதபடியால் சிலருக்கு மாத்திரமே மற்ற தலங்கள் முத்தியளிக்கத்தக்கனவாயிருக்கின்றன.

''குண்டகர்பதிதர் கோளகர் புலையர்
கொலையின ருறுப்பினிற்
குறைந்தோர்,
கண்டக நெடுந்தூரத்தினிலிருப்போர்
கருணை சேரருணை பூதரத்தை,
எண்டகவொருகால் நினைத்திட
முத்தி
இவரலால் விலங்கு புன்மரங்கள்,
முண்டக முதலாயினவு முன்காண
முளைத்திட முத்தியே
பெருமால்''
(ஷை சருக்கம்—17)

(இ-ள்) குண்டகர் முதலிய தாழ்ந்தவர்களுக்கும், அங்கவீனர்களுக்கும், போகமுடியாமல் நெடுந்தூரத்திலிருப்பவர்களுக்கும் ஒரு தரம் நினைத்தால் முத்தியுண்டாகும். பறவை மிருகம் முதலியன அங்கு சென்றாலும், மரம், செடி, கொடிகள் அங்கு முளைத்தாலும் முத்தியடையும். (ஆதலால் இத்தலம் எல்லாத் தலத்தினுஞ் சிறந்தது)

இதற்குப் போட்டியாகத் திருவிளையாடற் புராணத்தில் கூறியிருப்பதாவது:—

"...................அவற்றிலாத,
சைவதலமதிகமவற்றறுபத்
தெட்டதிகமவை தமிலீரெட்டுத்
தெய்வதலம் அதிகம் அவற்றதிக
தலநான் கவற்றைச் செப்பக்
கேண்மின்''
(தலவிசேடம்—3)

(இ-ள்) அழிவில்லாத சைவதலங்கள் சிறந்தன, அவற்றுள் அறுபத்தெட்டுத் தலங்கள் சிறந்தன. அவற்றுள் தெய்வீகம் பொருந்திய பதினாறு தலங்கள் சிறந்தன. அவற்றுள் நான்கு சிறந்தன.

''அன்னமலிவயற்புலியூர் காசிநகர்
காளத்தி ஆலவாயாம்,
இன்னவளம் பதிநான்கில் திருவால
வாயதிகம், எவ்வாறென்னில்,
மின்னவிர் அம்பலங்காணக் காசிநகர்
வதிந்திறக்க வியன் காளத்தி
பொன்னகரம் பக்தியினால் வழிபாடு
செயவளிக்கும், போகம்வீடு''
[ஷை—4]
அமர்தழையும் திருவாலவாய் கேட்டு
வுடன் போகம், அழிக்கும் மீண்டு,
பிறந்திறவாப்பேரின்பக்கதியளிக்கும்
இதுவன்றிப், பிறழாதெங்கும்,
நிறைந்தபரன் எத்தலமும்படைப்பான்
இத்தலத்தை முதனிருமித்தந்தங்கண்
உறைந்தருளினானன்றி இன்னமுளத
தன் பெருமை உரைப்பம்கேண்மின்''

(இ-ள்) சிதம்பரம், காசி, காளத்தி, மதுரை முதலிய தலங்கள், தரிசித்தல், இறத்தல் பக்தியினால் வழிபாடு செய்தல் என்பனவாகிய காரியங்களால் இருமையின்பங்களையும் நல்குகின்றன. மதுரையானது தன் பெயரைக்கேட்ட அளவிலேயே இருமையின்பத்தையும் முக்தியையும் அளிக்கின்றது. ஆகையால் எல்லாத் தலங்களிலும் இது சிறந்தது. அன்றியும் பரமசிவன் முதலில் இந்நகரத்தையுண்டாக்கி இதிலிருந்துகொண்டு தான் எல்லா உலகத்தையும் படைத்தனன். இன்னுமிதன் பெருமை பல உண்டு.

அருணாசல புராணத்தில் சிதம்பரம், காசி, திருவாரூர், திருவண்ணாமலை ஆகிய நான்கு நகரம் முக்தி கொடுக்கக்கூடியவையென்று சொல்லப்பட்டிருக்கின்றது. மதுரை சேர்க்கப்படவில்லை. ஆனால் மதுரை திருவிளையாடற் புராணத்தில் சிதம்பரம், காசி, காளத்தி, மதுரை ஆகிய நான்கு ஊர்கள் முக்தி நகரமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. திருவண்ணாமலையும், திருவாரூரும் ஒழிக்கப்பட்டு அவற்றுக்குப் பதில் மதுரையும், காளத்தியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. திருவண்ணாமலை நினைக்க முக்தியென்றால் மதுரையின் பேர் கேட்க முக்தியென்று எழுதப்பட்டிருக்கின்றது. இன்னொரு வேடிக்கையான பெருமையும் மதுரைக்குச் சொல்லப்பட்டிருக்கிறன்து. எல்லாச் சிவ தலங்களையும் உண்டாக்குவதற்குத் திட்டம் போட்டுக்கொண்டு மதுரை நகரத்தை முதலில் உண்டாக்கிப் பரமசிவன் அதிலே வந்து உட்கார்ந்து கொண்டு மற்ற தலங்களையுண்டாக்கினார் என்று எழுதியிருப்பதைக் காட்டினும் வேடிக்கை வேறொன்று வேண்டியதில்லை. திருவண்ணாமலைக்காரர் மதுரையென்று ஒரு தலமிருக்கிறதென்றும், அதன் பெருமை திருவண்ணாமலைக்குக் காணாதென்றும் நகரச்சருக்கத்தில் சொல்லுகிறார். ஆனால் மதுரைக்காரரோ அண்ணாமலையை அநாமதேயப் பட்டியலில் போட்டிருக்கிறார்.

இனி திருவாரூர்ப் புராணத்தில் அந்த ஊர்ப்பெருமையை,

"தேசுசால் உலகின் மேலாம்
சிவதலம்பல அவற்றுள்,
ஆசுதீர் காசி மேன்மை
யடைந்துள ததனின்சால,
ஏசிலா மேன்மை பெற்ற
தாரூரென்றெடுத்துரைக்கும்,

மாசுதீர் தொன்மை சான்ற
மறைமுதல் நூல்களெல்லாம்.''
(தலமகிமை—18)

''இந்த மாநகர்க்கு மேலாம்
நகரமும் ஈறில் செல்வத்,
திந்திமா நகரமொத்த
நகரமும் எறிநீர் சூழ்ந்த,
இந்த மாநிலத்திலில்லை
இணைஇதற்கிஃதே
யாகும்.........''
(ஷை—77)

(இ-ள்) எல்லாத் தலங்களிலும் காசி சிறந்ததென்றும், அதனிலுஞ் சிறந்தது திருவாரூரென்றும் வேத முதலிய நூல்களெல்லாம் கூறும். இந்நகரத்திற்கு மேலான நகரமும் ஒப்பான நகரமும் கிடையாது. இதற்கிதுவே இணையாகும் என்று கூறுகிறார்.

இவர் ஒரேயடியாக அடிக்கிறார். வேத முதலிய நூல்களெல்லாம் திருவாரூர் சிறந்ததென்று கூறுவதாக எழுதி விட்டார். அந்த நூல்களுள் திருவிளையாடலும் அருணாசலப் புராணமும் சேர்ந்திருந்தால், எல்லா நூல்களும் திருவாரூரைத் தலை சிறந்ததென்று கூறுவதாக இவர் சொல்லுவது முழுதும் முரண்பாடாக இருக்கின்றதே? காசி சிறந்ததென்றும் ஆனால் தங்கள் தலத்திற்கு அது தாழ்ந்ததென்றும் மூன்று புராணக்காரரும் எழுதிவிட்டார்கள். இதற்குக் காரணம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள பார்ப்பனர்கள் சோம்பேறிகள் வயிற்றுப் பிழைப்புக்காகப் புராணங்களைக் கண்டவாறு பாடி, மிகுதியான பொய்யையேற்றி பாமரமக்களை மயங்கச் செய்து காசு பறிக்கும் செய்கையன்றி வேறொன்றுமில்லை யென்பது வெளிப்படை. அன்றியும் இப்புராணங்களையெல்லாம் ஒரே முனிவர் கூறினதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒன்றுக்கொன்று முரணாக ஒருவரே இவ்வாறு கூறுவாரா? புராணக்காரர்கள் தாங்களே இவ்வாறு கூறிக் கொண்டார்களா? புராணங்கள் எல்லாம் உண்மை; பொய்யென்று புகலக் கூடாதென்பவர்கள் இக்கட்டுரையைப் பன்முறைபடித்துத் தக்க விடைகள் கூறுவாராக.

## மருத்துவர் கழக ஆண்டு விழா.

5—6—48 மாலை 4-மணிக்கு திருச்சி திராவிட மருத்துவர் கழக 25வது ஆண்டுவிழா கவுன்சிலர் டி. எஸ் பகவதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் வெ. நடேசன் ஆண்டு அறிக்கை வாசித்தார். பி. முத்துச்சாமி, மு. நக்கீரன், டாக்டர் க.பிச்சைமுத்துமற்றும் பலதோழர்கள் பேரியின் கூட்டம் கலைந்தது.

# திராவிடர்களே! ஒன்றுசேருங்கள்.

★

வயிற்றுப் பிழைப்பை நாடி இந்த நாட்டிற்குள் புகுந்த ஆரியர் இந்த நாட்டைச் சுரண்டியதோடல்லாமல், நாட்டைக் கைப்பற்றச் சூழ்ச்சி பல செய்தும், இந்த நாட்டின—திராவிட இன மக்களை ஒன்று சேரவிடாமல், ஜாதி முறையை ஏற்படுத்தி திராவிட மக்களை பல பிரிவினராக உண்டாக்கி ஒற்றுமையைக் குலைத்து விட்டனர். அரசர்களை அழகிய அணங்குகளைக் கொண்டு ஆசை காட்டி மோசம் செய்து, அரண்மனைக்குள் புகுந்து அமைச்சராக அமரத் தொடங்கினர். மதுவும் மாதும் கொண்டு மன்னனை மதிமயங்கச் செய்து மக்களை மதமென்னும் சேற்றில் ஆழ அமிழ்த்தி விட்டனர். ''வள்ளுவன நீதி ஆட்சி செய்த திராவிடத்திலே மக்களை மாய்க்கும் மனு நீதி ஆட்சி செய்யத் துவங்கியவுடன் திராவிடர் தம் ஆட்சியிழந்தனர். தன்மானமிழந்தனர். கலையிழந்தனர். நல் வாழ்வும் அறிவும் இழந்தனர். ஆரியம் செய்த சூழ்ச்சியினால் திராவிடர் தம் இன மாண்பை மறந்து மாற்றானுக்கு இடங்கொடுக்ரலாயினர். ஆரியர் திராவிடர் கரங்களைக் கொண்டே திராவிடர் கண்களைக் குத்தினர். திராவிடர் செய்த இனத்துரோகத்தினால் தான் இந்தக் கேவல வாழ்வு வந்துள்ளதென்பதை நாம் மறக்க முடியாது. இராவணனை அவன் தம்பி விபீஷணனைக் கொண்டும், வாலியை அவன் தம்பி சுக்ரிவனைக்கொண்டும், இரணியனை அவன் மகனைக்கொண்டும் ஆரியர் கொன்றனர். இன்னும் தம் உயர்வுக்காக கம்பனையும், சேக்கிழாரையும், இன்னும் பல திராவிட இனத்தவர்களைக் கொண்டே திராவிடத்தைத் தாழ்த்தியும், தம்மை உயர்த்தியும் கதைகளையும், புராணங்களையும் எழுதி வைத்துக்கொண்டனர். நமது முனேன்ார் செய்த துரோகத்தாலும், முட்டாள் தனத்தினாலும் நமது வாழ்வு சீர்குலைந்து போய் விட்டது. இந்த இருபதாவது நூற்றாண்டிலேயும் ஆரியர் நமது இனத்தார்களைக் கொண்டே நம்மைத் தாக்கும் நிலையைக் கொண்டிருக்கின்றனரென்றால் அந்தக் காலத்தில் எப்படி நடந்திருக்கும்? தோழர்களே! சிந்தியுங்கள்.

ஏகாதிபத்தியம் செய்யும் யுத்தத்தில், அந்த யுத்தத்தில் பங்கு பற்றித் தியாகம் செய்யும் வீரர்களுக்கு கோப்பிரல், சார்ஜண்ட், மேஜர், காப்டன் முதலிய பட்டங்களைக் கொடுப்பது போல, ஆரியம் தனக்கு உதவி செய்த திராவிட இனத் துரோகிகளுக்கு செட்டி, பிள்ளை, முதலி, நாயுடு, அகமுடியார் முதலிய பட்டங்களைக் கொடுக்கச்செய்து மயக்கினர். ஆளுக்குத் தக்க, தொழிலும் வழங்கினர். ஆனால், ஆரம்பத்திலிருந்தே இன்று வரை—இனிமேலும்-எதிர்த்து வந்த, எதிர்த்து வருகின்ற—பழங்குடி மக்களைப் பஞ்சமர் என்று ஒதுக்கித் தள்ளியதோடல்லாமல், இனத்தைக் கொண்டே இனத்தைக் கொடுமை செய்யத் தூண்டிவிட்டனர் நயவஞ்சக ஆரியக் குமபல். ஆரியர் நாலு சாதி உண்டாக்கினரென்றால், திராவிடர் நாலாயிரம் சாதிகளைத் தமக்குள் உண்டாக்கி விட்டனர். உயர்வு, தாழ்வு என்ற உதவாக்கரைச் சண்டையில் ஈடுபட்டு மண்டைகளை உடைத்துக் கொண்டிருக்கையில் ஆரியன் ஆகாயம்போல் உயர்ந்து விட்டான். என்னதான் உயர் ஜாதியாக இருந்தாலும் ஆரியர், திராவிட மக்களைப் பொதுவாக ''சூத்திரன்'' என்றே அழைத்தனர் — அழைத்துக் கொண்டும் வருகின்றனர். அதிலும் அதிகமாக ஆரியத்தில் மயங்கினவர் தம்மை சற்சூத்திரர் அதாவது நல்ல தாசி மக்களென்று அழைத்துக் கொண்டனர். இன்றும் அப்படியே ஒப்புக்கொள்கின்றனர். என்னே! மானக்கேடு! இம்மாதிரித் தம்மைத் தாமே இழிவு செய்துகொள்வதில் விருப்பங்கொள்ளும் மக்கள் இந்த நாட்டைத் தவிர வேறு எங்கு இருக்கின்றனர்? மான ரோசமில்லாத மக்கள் வாழ்வதைக் காட்டிலும் மாண்டு மறைந்து போவதே சாலச்சிறந்தது. அறியாமல் செய்கிற பிழையை மன்னித்து விடலாம், அறிந்து செய்கிற பிழையை மன்னிக்க முடியாது. அன்று எப்படிப் பட்டம் பதவிகளுக்கு ஆசைப்பட்டு, இனத்தை மறந்து, ஆரியத்தின் அடிவருடிகளானாரோ, அதே போல் இன்றும் பல இனத் துரோகிகள் ஆரியத்திற்குக் கையாட்களாய் இருக்கின்றனர். ''தான் ஆரியர்க்கு அடிமை அதாவது தான் ஒரு இந்து'' என்று அறிவை அடகு வைத்து விட்டு கூறுகின்றனர். இத்தகைய துரோகிகள் ஒவ்வொரு நாட்டிலும் இருந்திருக்கின்றனர். சுகமாக அல்ல, உள்ளத்தில் அச்சத்தைக் கொண்டு. நாட்டின்மீது'அழியா அன்பு கொண்டுள்ள மக்கள் எழுந்துவிட்டால் இவர்கள் பாடு ''பருத்திப் பஞ்சுதான்'' திராவிட நாட்டில் உள்ள இவர்களுத்

கும் இத்தகைய நிலைமை வருவதற்கு அதிகக் காலமில்லை.

அரசியலிலே அடிமைகளாகவும், மதத்திலே மடையர்களாகவும், சமுதாயத்திலே தீண்டப்படாதவர்களாகவும் பழங்குடி மக்கள் கருதப்பட்டு வந்தனர். ஆரியம் தன்னை எதிர்க்கும் மக்களை எப்படி அடக்கி வருகிறது என்பதை இந்த நாட்டின் மக்களாகிய பழங்குடி மக்கள் படும் துயரிலிருந்து கண்டுகொள்ளலாம். எந்த இந்து மதத்திற்காக உழைத்தாரோ, எந்த வருணாச்சிரமம் வளமாக நாட்டில் வளரவேண்டும் என்று வாதாடினாரோ, எந்த ஆரியரின் உயர்வுக்காக உழைத்தாரோ அதே ஆரியத்தால் பெரியார் காந்தியார் கொல்லப்பட்டார். என்? ஒரு சில இந்துமதக் கொள்கைகளை எதிர்த்ததினால் அல்லவோ, "வளர்த்தகடா மார்பில் பாய்ந்து விட்டது" காந்தியாரை நோக்கி. இதுஆரியத்தின் பரம்பரைக்குணம்.

பழங்குடிமக்கள் தம் துயர் துடைக்கப்பலமதம் புகுந்து விட்டனர். அங்கும் ஆரியம் சும்மாவிடவில்லை. தம் அம்புகளை விட்டனர். எம்மதம் புகினும் தாழ்த்தப்பட்டவர் தாழ்த்தப்பட்டவரே. உயர்த்தப்படவில்லை. பழங்குடிமக்களின் பெயர்கள்தான் மாறி மாறி வந்ததே ஒழிய வாழ்வு மாறவில்லை. பொது எதிரியைத்தாக்கிய குற்றத்தால், சொந்த நாட்டின் நன்மைக்காகப் போராடி சுகம் இழந்து, சொந்த இனத்தாலே தாழ்த்தப்பட்டு, வீழ்த்தப்பட்டு, நசுக்கப்பட்டமக்களை, சுயமரியாதையைக்காப்பாற்றச் சமர்புரிந்து, தன் சுயமரியாதையிழந்த பழங்குடி மக்களைத் தட்டி எழுப்பினார் பெரியார் ஈ. வெ. ரா. சுகவாழ்வு பெற சுயமரியாதைத்தீவுக்கு அழைத்துக்கொண்டு சென்றார். மக்கள் தன்னுணர்வு பெற்றனர். ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் அடக்கியாளப்பட்ட மக்கள் அடிமைச்சங்கிலியை உடைத்துக்கொண்டு எழுந்து நடக்கத்துவங்கினர். யாரால் நமக்கு இக்கேடுவந்தது? எதற்காக? என்ற சிந்தனை எழும்பியது. தீண்டாமைப்பேயை ஒழிப்போம் என்று வெளியேகூறி, உள்ளே அதைவளர்த்து வந்த எத்தர்களை அம்பலத்திற்கு இழுத்துக் கொண்டு வந்து அவர்களை அல்லல் படுத்தினார் பெரியார் ஈ. வெ. ரா. எந்த நாட்டில் பழங்குடி மக்கள் பிறந்தனரோ, அதே நாட்டில் நடக்கவும், படிக்கவும், உண்ணவும், உடுக்கவும், இருக்கவும், நிற்கவும் உரிமை இழந்தனரோ அதே உரிமையை மீண்டும் பெறலாயினர். யாரால்? திராவிடத்தந்தை பெரியாரின் உழைப்பினாலல்லவோ. சுயமரியாதை இயக்கம் இந்த நாட்டில் செய்தவேலை, வீழ்த்தப்பட்டமக்களை எழுச்சியுறச் செய்தது, சிந்தனையற்ற மக்களைச்சிந்திக்கச் செய்தது.

எந்த இனத்திலும் சந்தர்ப்பவாதிகள் உண்டு. அத்தகையோர் முன்னேறி வந்த பழங்குடி மக்களை, தமது வாழ்க்கைக்கு ஏணியாக்கிக் கொண்டனர். எந்தமக்களால் உயர்வடைந்தனரோ அவர்களைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் இருந்து விட்டனர். புதிது புதிதாகத் தோன்றிய காளான் கட்சிகள் எல்லாம் பழங்குடி மக்கள் பெயரைச்சொல்லியே வளர்ந்துவந்து மறைந்து விட்டன. காங்கரஸ் சேர்த்த ஹரிஜனநிதி என்ன கதியோ தெரியவில்லை. இன்றைய மனுதர்ம ஆட்சியில் இனம் இனத்தோடு சேர முடியவில்லை. அரசியலிலே அம்பேத்கார் அலறினார். இந்திய உபகண்டத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அத்தனை பேரையும் ஒரே பட்டியில் போட்டார். ஆரியம் அறுத்து விட்டுக்கொண்டே வந்தது. ஆங்கிலேயன் இந்த நாட்டைவிட்டுப் போகும்வரை அம்பேத்கார் வார்த்தை ஆடியது. ஆங்கிலேயன் சென்றதும் அவன்வாரிசு ஆரியம் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தது. அம்பேத்கார் அசைவின்றிப்போனார். சிவராசும், மீனாம்பாளும் இருக்கிறார்களோ இல்லையோ என்பதே தெரியவில்லை. "செடியூல்ட் வகுப்புப் பெடரேசன்" தலைவர்களெல்லாம் செத்துத்தான் போனார்களோ அல்லது ஆரியரின் அடிவருடிகளானாரோ தெரியவில்லை. எது எப்படியோ போகட்டும். தென்னாட்டில் வாழும் பழங்குடிமக்களின் முன் இப்பொழுது பெரும் பொறுப்பு இருக்கிறது. எவ்வளவு சீக்கிரம் தலைவர்கள் தோன்றினார்களோ அவ்வளவு சீக்கிரம் மறைந்து விட்டார்கள். போதாதற்கு கடவுள் பலரை நம்பியும், மதம் பலமாறியும் கண்டபலன் உண்டதுதான். வாழ்வு தாழ்வாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது. சாம்பான் பறையனாகவும், பறையன் தீண்டப்படாதவனாகவும், தீண்டப்படாதவன் அரிஜனனாகவும், அரிஜன் தாழ்த்தப்பட்டவனாகவும் தான் முன்னேறியிருக்கிறது. பெயர்கள் தான் முன்னேறி வந்திருக்கிறது. ஆனால் மக்கள் முன்னேறவில்லை. இன்னும் இப்படியே இருந்து கொண்டிருந்தால் புதுப்புதுப் பெயர்கள் வருமே ஒழிய புத்துலகைக்காணப் புது வாழ்வு பெற முடியாது.

ஆகையால், பழங்குடிமக்களே! இனி அம்பேத்காரை நம்பிக்கொண்டிருப்பதில் பயனில்லை. அவரை நம்புவது "கானலை நீரென்று நினைத்து ஓடும் மானின் கதியைப்போல்தான் இருக்கும்" ஒருவருடத்திற்குமுன் இருந்த அம்பேத்கார்வேறு. இன்றைய அம்பேத்கார்வேறு. எந்த ஆரியம் அவரைப்பஞ்சமன் என்று கூறி இகழ்ந்ததோ, அதே ஆரியத்தின் வழிவந்த ஆரியப் பெண்ணின் புருடன் ஆனார். இப்பொழுது அம்பேத்கார் "பாதிப் பார்ப்பான்". காங்கரஸ் மந்திரி. எந்தக் காங்கரஸ் அவரை வெறுத்ததோ அதே காங்கரஸ் கூப்பிட்டு வேலை கொடுக்கிறதென்றால், அவருக்குப் பயந்தல்ல. 'கடிக்கிற நாய்க்கு எலும்புத்துண்டைப்போட்டது போல்தான் போட்டிருக்கின்றனர். குலைக்காமல் இருக்க நஞ்சும் கலந்தேபோட்டிருப்பர். தன் புதல்வனுக்குகடைசிச் சமயத்தில்கூட தண்ணீர் கொடுக்க மறுத்த ஆரியத்திற்கு மாப்பிள்ளையானார். அரைவாசி ஆரியனாய் இருக்கும் அம்பேத்கார் முழு ஆரியனாய் மாறுவதற்கு நெடுநாட்களில்லை. ஆகையால் அரை ஆரிய அம்பேத்காரரிடம் நம்பிக்கை வைப்பதில் பலன் இல்லை. அவர் வடநாட்டைச் சேர்ந்தவர். அங்குள்ள மக்களுக்குத்தான் அவர் தலைவராக வரமுடியும். தென்னாட்டில்—திராவிட நாட்டில் வாழும் பழங்குடி மக்கள் திராவிடப் பெருங்குடிகளின் ஒரு பகுதியாவர். ஆரியத்தின் சூழ்ச்சியினால் தாழ்த்தப்பட்டோரே ஒழிய இனத்தில் திராவிடர். இதையாரும் மறுக்க முடியாது. இன்றையத் திராவிடத்திலே இன உணர்ச்சி முற்றி, திராவிட நாட்டுப் பிரிவினை முழக்கம் நாட்டை ஆட்டிக் கொண்டு வருகிறது. எந்தச் சமயத்தில் எரிமலை வெடித்து நாடு பிரிகிறதோ தெரியவில்லை. நாடு பிரிந்தால்—நாடு பிரியத்தான் போகிறது. அதன் பிறகு பழங்குடி மக்கள் வடநாட்டு அம்பேத்காரை வணங்கவோ, அவர் வார்த்தையைக் கேட்கவோ முடியாததோடு அவர் வார்த்தை இங்குசெல்லவும் செல்லாது. உதாரணமாக பாகிஸ்தானைப் பாருங்கள். பாகிஸ்தான் பெற ஜனாப் ஜின்னா இனவுணர்ச்சியை அதாவது மத உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டி பாகிஸ்தானை அமைத்து விட்டார். வடநாட்டில். அந்தப் பாகிஸ்தானுக்காகத் தென்னாட்டு முஸ்லிம் மக்கள்கூட தங்கள் உடல், பொருள் ஆவி அத்தனையும் தத்தம் செய்தனர். நாடு பிரிந்தவுடன் பாகிஸ்தான் நலம் முழுதும் வடநாட்டுமுஸ்லிம்களுக்குத்தான். தென்னாட்டு முஸ்லிம் மக்கள் இந்திய யூனியனுடன் அய்க்கியமடைந்து விட்டனர். அவர்களுக்காவது ஒரே மதம் என்ற ஒற்றுமை இருந்தது. ஆனால் இந்த நாட்டில் வாழும் பழங்குடி மக்கள் வடநாட்டாரோடு எந்தவிதத்தில் ஒற்றுமை? மதத்திலும் இல்லையே. இனத்திலா? இல்லையே. மொழியிலா? இல்லையே. அரசியலில்தான் ஒற்றுமை. அதுவும் அம்பேத்காரின் உழைப்பு வடநாட்டில்தான் பயன் அடைந்தது. அதுவும் உத்தியோகத்தில்தானே ஒழிய மனிதத்தன்மையில் இல்லை. இன்னும் மக்களை மாக்களாய்த்தான் நடத்தி வருகின்றனர் அங்கு. இன்னும் சிலநாட்களுக்குள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழித்து விடுவார்கள்போல் தெரிகிறது.

அதன்பின் இப்பொழுது இருக்கும் கொஞ்ச நஞ்சச் சலுகையும் பஞ்சாய்ப் பறந்துவிடும். ஆகையால் பழங்குடி மக்களே! திராவிட இனஉணர்ச்சி கொள்ளுங்கள்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னே "திராவிடன்" என்று கூறினால் அது அரசியல், மதஇயல், சமூக இயல் ஆகிய துறைகளில் வீழ்த்தப்பட்டுக் கிடந்த பழங்குடி' மக்களையே குறிக்கும் சொல்லாக இருந்தது. இதனால் "திராவிடன்" என்று சொல்லுவதே இழிவு என்று கருதப்பட்டு வந்ததோடல்லாமல் நடைமுறையிலும் காண்பிக்கப்பட்டு வந்தது. இனவுணர்ச்சி இழந்த மக்கள் இனவுணர்ச்சியடைந்தனர். தன்மானம் இழந்த மக்கள் தன்மானம் பெற எழுச்சி கொண்டனர். "திராவிடன்" என்றுகூற கூசி நடுங்கி வெட்கப்பட்டவனே, தான் "ஒரு திராவிடன், என்னாடு திராவிடநாடு" என்று மார்தட்டிக்கூற முன்வந்து விட்டான் என்றால் நிலைமை எவ்வளவு தூரம் மாறிவிட்டது என்பதை எண்ணிப் பாருங்கள். இந்நிலைமையை—திராவிட இனஉணர்ச்சியைத் தட்டி யெழுப்பியவர் யார்? பழங்குடி மக்களின் பாதுகாவலர் பெரியார் அன்றோ. இனியும் காலத்தின் போக்கை அறியாமல் பழைய வழிக்கே போய்க் கொண்டிருந்தால் எதிர் வரும் புரட்சி உங்களைத் தாக்காமல் விடாது. "மாறு அல்லது மாண்டுபோ" என்றுரைத்த வீரலெனின் அறிவுரையின்படி தமக்குள் பெரிய மாறுதல்களைச் செய்ய வேண்டும். மற்றவர்களைவிட இந்த நாட்டுப் பிரிவினையில் முக்கிய பங்கு பழங்குடி மக்களுக்கே உரியது. ஏனெனில், ஆரியத்தின் வஞ்சக வலையில் சிக்காது அவர்களை எதிர்த்து அதனால் தம்நல் வாழ்வு இழந்தும் மனங்கலங்காது திராவிடத்தின் பொது எதிரியை எதிர்த்துப் போராடி வருகிற வீரமக்களல்லவா? இன்னும் போர் முடியவில்லை. இனிதான் நாம் "இருப்பதா அல்லது இறப்பதா" என்ற முடிவுக்கு வரவேண்டும். "இந்த அணுகுண்டு யுகத்திலேகூட "அய்யர், அய்யங்கார்ப் பட்டங்களை விடமுடியாது" "அவசியம் வந்தால் யூதர்களைப்போல் நடக்கப் போவதாகக்" கூறும் ஆரியத்தின் ஆணவத்தை அடக்க வேண்டும். எங்கேயோ இருந்து வந்து நம்மை ஏமாற்றி வாழ்ந்ததும் போதாமல், இப்பச் சண்டைக்கும் கிளம்புவதென்றால் ஆரியம் எத்தகைய அயோக்கியத்தனம் கொண்டுள்ளது என்பதை எண்ணிப் பாருங்கள். துவக்கத்திலே ஆரியத்தின் பல்லை உடைத்திருந்தால் இந்த ஆணவப் பேச்சு வருமா? பிச்சை எடுக்க வந்த கூட்டம் கச்சை கட்டுவதென்றால் இந்த நாட்டில் பிறந்து, இந்த நாட்டின் உப்பைத் தின்று வளர்ந்த திராவிடர்களாகிய நாம் இறந்தா போனோம்? இல்லை! இல்லை!! நமது நாட்டை இழிவுபடுத்துகிற கூட்டம், சுரண்டுகிற கூட்டம் ஆகிய இவைகளை ஒழிக்க வேண்டியது நமது கடமை. வாழ்ந்தால் மானத்தோடு வாழ்வோம் இலலையேல் மானத்தைக் காப்பாற்றப் போரிட்டு மடிவோம். வாழவேண்டும் அல்லது ஒன்றாய் வீழ வேண்டும்.

திராவிடர்களே! ஒன்று திரளுங்கள். நமக்குள் உள்ள கட்சிப்பிரிவினைகளைக் குழிதோண்டிப் புதையுங்கள். ஜாதிப்பட்டங்களைச் சம்மட்டியால் அடித்துத் தொலையுங்கள். இடையிற் புகுத்திய, தாழ்த்தப்பட்டவரென்றோ, அரிஜனமென்றோ, செடியூல்ட் வகுப்பாரென்றோ அழைத்துக் கொள்ளாதீர்கள். எல்லோரும் திராவிடர் என்ற உணர்ச்சி கொள்ளுங்கள். எத்தனையோ தலைவர்கள் நம்மிடையே தோன்றி நடு ஆற்றில் கையைவிட்டும், சிலர் எதிரியிடமும் சேர்ந்து கொண்டனர். ஆனால் பழங்குடி மக்களின் உணர்ச்சியைத் தட்டி யெழுப்பிய அண்ணல், சிதறிக் கிடந்த மக்களை ஒன்று சேர்த்த செம்மல், திராவிடப் பெருங்குடி மக்களுக்காகத் தியாகம் பல செய்த திராவிடத் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் இன்னும் நமக்காக ஓய்வு இல்லாமல் உழைக்கிறார். அவர் இருக்கும்போது நாம் ஒன்று சேரவேண்டும்.

தோழர்களே! நாட்டுணர்ச்சியும் இனவுணர்ச்சியும் கொள்ளுங்கள். ஒவ்வொரு ஊர்களில் உள்ள பல பலப் பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்ற கழகங்களையும், கட்சிகளையும் அழியுங்கள். அழித்து இனத்தைக் குறிக்கோளாகக் கொண்டு "திராவிடர் கழகம்" என அழையுங்கள். அரசியல், மதம், சமூகம் ஆகிய துறைகளில் நமக்குள்ள இழிவைக் குறிக்கும் கருப்பு உடையை அணியுங்கள். அணிந்து முன்வாருங்கள். இழந்துவிட்ட நாட்டைப்பெற ஒன்று திரளுங்கள் வெற்றி நமதே.

"இலங்கை தமிழ் மாறன்"

(●)

---

[2ம் பக்கத் தொடர்ச்சி]

என்று வீர உரை புகன்ற வீர மகளிர் குலத்திலுதித்த நாம், முந்தாநாள் போரிலே தன் அண்ணன் இறக்கவும், நேற்றையப் போரிலே கணவன் யானையால் கொல்லப் படவும், இன்றையப் போருக்கு ஆள் இல்லையே என வருந்தி வீட்டிலுள்ள தன் அய்ந்துவயது மகனை போருக்கனுப்பிய நாரீ மணிகள் பிறப்பில் வந்த நாம், அய்யம் என்ற ஆரியருக்கு அலட்சியம் செய்யாமல் அமுது அளித்த நாம், இன்று பிச்சை எடுப்பதா? வேல் பிடித்த கை இன்று வேகாத வெயிலில் பாடுபடுகிறதே! எல்லோரும் ஓர் இனம் என்று வாழ்ந்து, இன்று ஆரியம் செய்த பழியால் ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி நாட்டில் நிலைவதா! வீர உரை புகன்ற மென்வாய் இன்று தலைவிதி, கர்மவினை என்று வலிவற்று பகர்கிறதே!

தோழியரே! கடைசியில் ஓர் சொல்: நம் திராவிட ஆடவர்கள் பெரும்பாலோர் மூடப்பழக்க வழக்கங்களை விட்டொழித்து, புரட்டுப்புராணங்களையும், திருட்டுப் பார்ப்பனீயத்தையும், முரட்டுச்சூது வாதுகளையும், கபடநாடகங்களையும், இடத்திற்கிடமாக, நேரத்திற்கு நேரமாக, அணுவக்கணுவாக ஆராய்ந்து மதிதெளிந்து, பகுத்தறிவு இயக்க திராவிடர் தந்தை பெரியார் அவர்கள் தலைமை கொண்டு தலை நிமிர்ந்து இயக்கப்பாதையிலே நடக்கின்றனர். ஆதலால் நம் போன்ற பெண்களிடை பிரசாரம் வேண்டும். மிகமிக அடிதளத்திலேயே சீர்திருத்தம் வேண்டும். இல்லத்தில் கணவன் மனைவி திராவிடக்கழகக் கொள்கையை மனதிலிறுத்தி வாழ்க்கை நடத்தி புராதனங்களை (பழக்கங்கள்) நாட்டை விட்டுக் கிடத்தி, நம்நாட்டை (திராவிடம்) நாம் அடைந்து, நலமார்ந்து வாழவேண்டும். பெண்கள், கல்வி, சமுதாயம், ஆகியவைகளில் முன்னேறி திராவிடப் பெண்டிர் கழகங்கள் ஏற்படுத்தி நாட்டுக்காகஉழைத்தால் பார்ப்பனீயம் புறங்காட்டும். (முன்னமேயே புறங்காட்டுவது அதன் இயல்பு) வைதீகம் வந்த வழிசெல்லும், புராணங்கள் புதைக்கப்படும், பெண்ணடிமை ஆட்டங்கொடுக்கும், அக்கிரகாரம் சேரியாகும், சேரி அக்கிரகாரமாகும், கோவிலிலே கல்வி குடிபுகும், சூத்திரப்பட்டம் சுருட்டியடித்து ஓடும், மங்கிப்போன மாட்சிமை மலரும். அணைந்து விட்ட திராவிடச் செஞ்சுடர் ஆழி சூழ் உலகில் ஒளிவீசும். இழந்த திராவிடம் இன்பத்திராவிட மாகத் திகழும் என்பது உறுதி! உறுதி!!

---

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE